மடாதிபதிகளின் மர்மங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 MAY 1951
MADRAS

ஆசிரியர்:
மாஜி மடாதிபதி

விலை அணா 12

கர்ஜனை பதிப்பகம்
கும்பகோணம்

முதற் பதிப்பு: மார்ச்சு, 1951

114155

ரெயின்போ பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி

ஆலயங்களையோ, மடங்களையோ அழிக்கவேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. அவைகளால் நாட்டு மக்களுக்கு உருவான பயனுள்ள ஆக்கவேலைகள் உண்டாக்கப்பட வேண்டியே அவைகள் அழியட்டும் என்கிறோம்.

கர்னல் இங்கர்ஸால்,

ராபர்ட் க்ரீன்.

பதிப்புரை

மடம்! சைவத்தையும் தமிழையும் வளர்க்க ஏற்பட்டுள்ள ஓர் சாதனம். இன்று "மடங்களை இடியுங்கள் தகறுங்கள் சாமிகாள் கோட்டைகளை" என்கின்றனர். முன்னாள் முதலமைச்சர் திரு. ரெட்டியார் கூடத்தான் கூறினார், மடங்களில் ஊழல் மலிந்திருக்கிறது என்று. மக்களுக்கும் மடங்களைப்பற்றிய வகையில் மன வெறுப்பு மிகைப்பட்டு வருகிறது.

ஏன் ?

இந்தியப் பிரதமருக்குத் தங்கச் செங்கோலை பரிசளித்தார்களே! அதற்காகவா? காந்திஜி உருவச் சிலைக்கு அவரது அஸ்தியை வைத்து அஸ்தி வாரம் போட்டு அழகான ஆஸ்ரமம் அமைக்கப் போகிறார்களே! அதற்காகவா? நாத்திகம் பரவும் இன்று சைவப் பிரசார 'வான்'கள் மூலம் சமயத்தையும், தமிழையும் வளர்க்கும் ஆஸ்திகச் செயல்கள் புரிகிறார்களே! அதற்காகவா?

எதற்காக என்பதையும் இந்நாட்டில் மடங்கள் இன்றைய நிலையிலே இருக்க வேண்டியது தானா? அல்லது மாற்றியமைக்கப்பட வேண்டியது தானா என்பதையும் இந்நூலைப் படித்து சிந்தித்து நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்.

பாம்பின்கால் பாம்பிற்குத்தான் தெரியும் என்பது பழமொழி. மடங்களைப் பற்றியும், மடாதிபதிகளைப் பற்றியும் ஓர் மடாதிபதிக்கு நன்றாகத் தெரிந்

இந்தப் போலி வேடப் பண்டாரச் சந்நிதிகளும் தம்பிரான்களும். இந்த சத்தியத்தை சர்க்கரைப் பொங்கலாக மதித்து, சமயக் கோட்பாடுகளால் சட்டங்கள் வகுத்து, தற்காப்புச் செய்து சண்டாளத்தனமாய் நடக்கும் பண்டாரச் சந்நிதிகளான இந்த மடாதிபதிகள் இந்நாட்டிற்கு உகந்தவர்கள் தானு?

"காவி யுடுத்தும் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் திரியாதே"

எனத் திருப்புகழும்,

"மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்"

எனத் திருக்குறளும்

கூற, மொட்டையடித்தும், சடை வளர்த்தும், கொட்டை கட்டியும், காவி உடுத்தியும் மக்களை வேடத்தால் ஏமாற்றி, மமதையோடு தான் வாழ வழி வகுத்து மான ஈனமின்றி மந்தகாச வாழ்வோடு இருக்கும் மடாதிபதிகள் இன்றைய வறுமை நாட்டில் அரியாசனம் போன்ற பொன்னுசனத் திருத்திப் போற்றப்பட வேண்டியவர்கள் தானு?

"தனி யொருவனுக் குணவில்லை யெனில்
இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்று பாடினரே பாரதியார்! இன்று நம் கண் கூடாக மதம் என்னும் கோட்டையிலே, கடவுள் எனும் காவலால், தனி யொரு மனிதன் சுகமுற வேண்டி, பேரின்ப வேட்கையை சிற்றின்ப லீலையாகத் திரித்தி, கல்விக் கூடங்களை கலவிக் கூடங்களாக மாற்றி, யோக சாதனையை போக சாதனையாகப் புரட்டி கபட வேடத்தால் காலித்தனங்கள் புரிகின்ற இந்தப் போலி மடாதிபதிகள் புகழப்பட வேண்டியவர்கள் தானு?

"அகர முதல எழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றேயுலகு"

என்ற முதற் குறளைப் பகலிலும்,

"ஊடுதல் காமத்திற் கின்பம் அதற் கின்பம்
கூடி முயங்கப் பெறின்."

என்ற இறுதிக் குறளை இரவிலும் கடைப் பிடிப்பதின் மூலம் தமிழையும் சைவத்தையும் வளர்க்கும், பணங்காக்கும் பைசாங்களாக கோடிக் கணக்கான திரவியத்தைக் கொண்டு கோலாகல சிற்றின்ப லீலைகளால் கும்மாள மடிக்கும் இந்தக் குபேரக் கூட்டங்களின் செல்வங்கள், இன்றைய வறுமை நாட்டின் பஞ்சத்தைப் போக்க பயன்படுமல்லவா என்றுதான் கேட்கிறோம். இன்றைய வறுமை நாட்டின் பசி, பஞ்சம் பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் இவை தொலைந்து சுகப்பட, மடங்களையும், மடாதிபதிகளையும் மாற்றி யமைப்பதின் மூலம் "மடபதியம்" அழிக்கப்படல் வேண்டும். அவற்றின் சொத்துக்கள் நாட்டின் வறுமையை நீக்கும்; பொருளாதார நெருக்கடியைப் போக்கும்; ஆக்க வேலைக்கு பயன்பட்டு நாட்டு மக்களைக் காக்கும்!

துறவியா? வேந்தனா?

"**மடம்**" என்றாலும் "ஆதீனம்" என்றாலும் ஒன்றுதான். இவை ஆஸ்ரமம் போன்றல்லாமல் அமைப்பில் அரண்மனை போன்றிருக்கும்.

"மடாதிபதி — ஆதீனத்தலைவர் — மகா சந்நிதானம் — பண்டாரச் சந்நிதி" என்று பலவாறு அழைக்கப்படுபவர் தான் இதன் தலைவர். இவர் எவருக்கும் பதில் சொல்லியாக வேண்டியதில்லை. இவர்கள் உருவத்தில் துறவி வேடம் பூண்டவர்களே யன்றி வாழ்க்கையில்

மன்னர் மன்னன் போன்று சுகம் பல அனுபவித்துக் கழிப்பவர்கள்.

"**தம்பிரான்**" என அழைக்கப்படுபவர்கள், இவர்களின் சீடர்களான வேடத்துறவிகள். "ஒடுக்கத் தம்பிரான்" என்பவர் மடாதிபதிக்கு அணுக்கத் தொண்டராகயிருந்து ஆவன கவனிப்பவர். எல்லாக் காரியங்களிலும் தலையிடும் சகல நிர்வாகப் பொறுப்புமுடையவர், "காரபார் தம்பிரான்" ஆதீனத்தலைவருக்கு அடுத்த படியான அதிகாரம் இவருக்கு உண்டு. "கட்டளைத் தம்பிரான்" என்பவர்கள் வெளியூர்களிலிருக்கும் தேவஸ்தானங்களையும் கிராமங்களையும் நிர்வகித்து நடத்தும் பொறுப்புடையவர்கள். இவர்கள் மடாதிபதியால் நியமிக்கப்படுவர். மாதச் சம்பளமுண்டு இவர்களுக்கு. இவர்கள் இருக்குமிடம் "கட்டளை மடம்" எனப்படும். இதற்கு இவர்களே தலைவர்கள்.

மடத்தில் மாதச்சம்பளத்தில், மாட்டுக்காரன் முதல் மடத்து சூப்பிரண்டு வரையில், சகல துறைகளிலும் சுமார் நூறு சிப்பந்திகளுக்குக் குறையாமலிருப்பர். இவர்களன்றி விசேட காலங்களிலே வேலைசெய்யும் குடிபடைகளுமுண்டு. ஆதீனத்தலைவருக்கு மட்டும் பக்கமிருந்து வேலைசெய்யும் சைவப் பணிவிடைக்காரர் ஐவருக்குக்குறையாதிருப்பர்.

"**பண்டாரக்கட்டு**" என்பதுதான் மடாதிபதி இருக்கும் இடம். இதன் தோற்றம் மன்னர் வாழும் மாளிகை போன்றிருக்கும். மூவாசை வெறுத்ததாக குருவினிடம் ஆண்டவன் சந்நிதியிலே சத்தியம் செய்து கொடுத்த சாமியார்களுக்காக, கோடீஸ்வரன் அனுபவிக்கும் குதூகல சுகபோக வஸ்துக்களனைத்தும் இந்த இடத்திலே குவிந்திருக்கும். "மார்பிள்" செய்யப் பட்டு கண்ணாடிபோல் முகம் தெரியும்படி பளபளப்

பாக இருக்கும் தரை. ஏராளமான நவநாகரீக விலை யுயர்ந்த சாமான்களை இங்கு காணலாம்.

மடாதிபதிகளின் ஆசனம் வெள்ளிப்பலகை; சாய்வது தங்கப்பலகையிலே இவை உறுத்துமென்று வெல்வெட்டு மெத்தைகளும் ஜரிகைத் திண்டுகளும் போடப்பட்டிருக்கும் மடங்களில் மின்ஸாரம் உண்டு பெரும்பாலும் எல்லா இடங்களிலும் கண்கவர் மின்சாரப் பொருள்களைக் காணலாம்.

'ஒடுக்கம்' என்ற பண்டாரசந்நதிகளின் படுக்கை யறை. இதன் பக்கத்தில் இருக்கும் "ஸ்பிரிங்ஸ்" விசையுள்ள கட்டில்களும், அழகான மிருதுவான மெத்தை திண்டு தலையணைகளும, கொசுவலை மற்றும் தளவாட சாமான்கள் நிறைந்திருக்கும் படுக்கையறை யிலே உள்ளவற்றிற்குமட்டும் மதிப்பு போடுவதென்றால் சுமார் லட்சரூபாய் கூறலாம். முற்றும் துறந்த சந்நியாசிக்கு மூவாசையை வெறுத்த சந்நியாசியின் படுக்கையறையின் மேன்மையைப் பாருங்கள்.

மடாதிபதிகளுக்காக உபயோகிக்கப்படும் அத்தனைப் பாத்திரங்களும், கக்கூசில் கால் கழுவும் செம்பு உட்பட வெள்ளியாலானவை.

சாமிகாளின் தாகசாந்திக்கு, உபயோகிக்க தங்க டம்ளர் களு", கோப்பைகளும் உண்டு. மற்றும் உபயோகத்தில் இல்லாத எவ்வளவோ வெள்ளிப் பாத்திரங்கள் இருக்கும். இந்தத் துறவிகளின் காதணிகளான "சுந்தர வேடம்" "ஆறுகட்டி" என்ற நகைகள் வைரத்தாளவை. பத்து விரல்களுக்கும் நவரத்தின மோதிரங்கள் அணிந்து கொள்வர், கழுத்தில் "கொத்து தாவட்டம்", "கண்டி", "மகரகண்டி", கைகளில் "கைக்கட்டு" முதலான ஆபரணங் களில் ருத்திராட்சங்களும், ருத்திராட்சம் போன்று



பலகோடி ரூபாய் மதிப்புள்ள ஆபரணங்களும், பாத்திரங்களும்



சிற்ப வேலைப்பாடு அமைந்த தங்கப் பல்லக்குத் தயார் !



முற்றும் துறந்த முனிபுங்கவர்கள்

தங்கத்தாலானவையும் கலந்திருக்கும். இவற்றின் முகப்புகளும், அவற்றில் தொங்கும் "கௌரீசக்க" மும் வைரம் பதித்தவையாக இருக்கும், இவர்கள் காலில் போட்டு நடக்கும் "திருவடி" (செருப்புக்கட்டை) தங்கத் தாலாக்கப்பட்டிருக்கும். மடாதிபதிகளுக்கென உள்ள ஆபரணங்களை மட்டும் சுமார் கோடிக் கணக்கில் மதிப் பிடலாம். உபயோகத்தில் இல்லாத இம்மாதிரி நகை களும் ஏராளமாக இருக்கும்.

தட்டார்களுக்கு சரீரத்திலேயே வைரத்தை வைத் திழைக்கும் கலை தெரியாது. அதைத் தெரிந்துகொண் டால் முதலில் கையாள்பவர்கள், இந்த ஆதீனத் தலைவர் களாகவே இருப்பர், இவர்கள் வருடத்திற்கு இரண்டு முறை பவனி வரும் "சிவிகை" (பல்லக்கு) தங்கத்தா லானது. மற்றும் சில தந்த சிவிகைகளுமிருக்கும். இவற்றின் பன்னுங்கு கொம்பு, திண்டு முதலியனவெல் லாம் வெல்வெட்டினுலும் ஜரிகையினுலும் விலையுயர்ந்த வையாக ஆக்கப்பட்டிருக்கும். பல மைல் தூரம் பயணம் செல்வதற்கு பயன்படும் 'மேனு" (பெட்டிப் பல்லக்கு) வெள்ளியாலாக்கப்பட்டிருக்கும். சில மடங் களிலே இது மரமாகவுமிருக்கும். கௌரவமிகுந்த தம்பிரான்களுக்கும் இந்தப் பல்லக்கு உண்டு. கையாளப் படாத எத்தனையோ பல்லக்குகள் தயாரில் இருந்து கொண்டே இருக்கும்.

இதன்றி இவர்கள் சமீப தூரம் காற்றுக்காக உலாத்தப் போவதும், வேலைத் துறையைப் பார்க் கப் போவதும் 'நாற்காலிப் பல்லக்கு' எனப்படும் வெள் ளிப் பல்லக்கிலே. இது மேனு போன்று பெட்டி யடைப்பில்லாமல் நாற்காலி போன்று காற்று தாரா ளமாய் வீசும்படியும் கண் பார்வை எப்பக்கமும் தெரியும்படியும் இருக்கும்.

கடவுளா? கைதியா?

இவர்களின் ஆத்மார்த்த பூஜையான ஸ்படிக லிங்கம் சுமார் இரண்டங்குல உயரத்திற்குள்ளிருக்கும். மற்றும், பரிவார மூர்த்திகள் போன்று பழனியாண்டவர், விநாயகர், பாலசுப்பிரமணியம் முதலான வெள்ளி செம்பு விக்கிரகங்களுமுண்டு. இந்தச் சாமிகளிருக்குமிடத்திற்கு "பூஜைமடம்" என்று பெயர். இங்கு வாத்தியம்முதல் ஸ்வாமி இழுக்கும் தேர் வரையில் அத்தனை சாமான்களும் வெள்ளி. தங்கத் தாம்பாளங்களும் தங்க அர்க்கிய வட்டைகளும் உண்டு. எண்ணற்ற உணவுப் பண்டங்கள் இதன் பெயரால் விரயமாக்கப்படத்தான் செய்யும். ஷோட சோபசார தீபங்களும் சரவிளக்கு குத்துவிளக்குகளும் நைவேத்தியப் பாத்திரங்களும் வெள்ளியே. இதற்கு ஏராளமான வைர நகைகளுமுண்டு.

இந்த லிங்கத்தை மட்டும் பூஜை முடிந்தவுடன் தேரை விட்டு எடுத்து விடுவார்கள். இதை வைக்க நவரத்தினங்கள் பதித்த தங்கப் பெட்டி ஒன்றுண்டு. சுவாமியை இதில் வைத்து அதை ஓர் இரும்புப் பெட்டியில் வைத்துப் பூட்டி சாவி பண்டாரச் சந்நிதிகளிடம் சேர்க்கப்பட்டு விடும். சகல லோக ரட்சகனை சாட்சாத் கருணை மூர்த்தியை காற்றுப்புகாத ஓர் இரும்புப்பெட்டியில், கடுங்காவற் கைதியைப்போல் பூட்டி வைத்துக்காப்பாற்றும் நிலையில் இவர்களின் கடவுள் கைங்கர்யங்களிருக்கின்றன.

முன்னொளிலே இதே சாமியைத் தான் மடாதிபதியிடம் மாறுபட்ட எண்ணங் கொண்ட தம்பிரான்கள் திருடிக்கொண்டு போக முயற்சித்தபோது, கடவுள் குதிரை வீரனாகத் தோன்றி, தம்பிரான்களை சவுக்கால் அடித்த சுவடுகள் மறுதினம் கூட அவர்கள் முதுகிலே காணப்பட்டதாக இவர்கள் சரித்தி

ரம் கூறுகிறது. அத்தகைய தற்காப்புள்ள சாமியை இக்காலத்தில் இப்படி ஏன் பூட்டி வைக்க வேண்டும்.

"**பூஜைத் தம்பிரான்**" என்பவர் தான் பெரும் பாலும் இந்தப் பூஜையைச் செய்பவர். பண்டாரச் சந்நிதிகள் அநேகமாக தினப்படி செய்வது கிடை யாது. அப்படிச் செய்தாலும் அபிஷேக அலங்கா ரங்கள் எல்லாம் பூஜைத் தம்பிரான் செய்து முடித்து காத்திருக்க, பண்டாரச் சந்நிதி வந்து சோடசோப சார தீபாராதனை மட்டும் செய்வார். விசேஷ காலங் களில் கண்டிப்பாக மடாதிபதி வந்தே தீருவார். இதற்கு தினப்படியில் மேளம், திருச்சின்னம், சேமங்கலம், நகரா முதலான வாத்யங்களும் உண்டு. ஏறுபடி காலங்களில் ஏராளமான வாத்யங்கள் வாசிக்கப்படும். இங்கு தேவாரம் ஓத பல ஓதுவார் களும் இருப்பர்.

சாதாரணமாகவே "பார்த்திப பூஜை" பெற்றுக் கொண்ட தம்பிரான்கள்கூட பூஜை முடித்துத்தான் எதுவும் சாப்பிடவேண்டுமென்பது சட்டம். மகா நைவேத்தியம் — பாலாபிஷேகம் — சந்தனபிஷேகம் முதலியன கண்டிப்பாகச் செய்யப்படவேண்டிய "உடையவர் பூஜை" "ஞான பூஜை" எல்லாம் பெற்றுள்ள இம்மடாதிபதிகள். "ஆத்மார்த்த பூஜை" நடக்கு முன்னதாகவே தங்கள் ஆத்மா திருப்தியடைய பலரகச் சிற்றுண்டி, பழரசம், சுடுபானம் முதலியன சாப்பிடு வது பழக்கத்திலிருக்கிறது. "மடங்கூட்டிகள்" என் றிருக்கும் சில பெண்களைத் தவிற (அவர்களும் கிழவி களாகத்தானிருப்பர்) வேறு எந்தப் பெண்களையும் மடத் தில் பகலிலே பார்க்க முடியாது. இந்தப் பூஜை தரிசனத் திற்குக்கூட எந்தப் பெண்களும் இருக்கமாட்டார்கள். என்றோ ஓர் நாள் ஓர் அம்மையார் வந்திருந்தால், அவரும் பழுத்து நரைத்துத் தளர்ந்த பாட்டியாகத் தானிருப்பர்.

உணவில் பிரிவேன்?

மடத்திலே சைவர்களின்றி மற்றையோர்க்குச் சம பந்தி போஜனம் கிடையாது. மடாதிபதிகள் குளிப்ப தற்குத் 'திருமஞ்சனம்' என்றும் சாப்பிடுவதற்கு "நைவேத்தியம்" என்றும்தான் வழக்கத்தில் பேசுவர். உணவிலே பெரும் பகுதி பணக்கார மடங்களிலே மூன்று பிரிவுகளிருக்கும். "பரிகலம்" என்னும் சாப்பாடுதான் மடாதிபதிக்குரிய முதல் ரகமான சாப்பாடு. நெய், பால், தயிர், பழவகை முதலான விலை மிக்க சத்துப் பொருள்கள் வேண்டியமட்டும் சேர்க்கப்பட்டதாயிருக்கும். இந்த உணவு பண்டாரச் சந்நிதி பரிகலச் சமையற்காரனைத் தவிர மற்றையோர்க்கு ருசி பார்க்கக்கூடக் கிடைக்காது. சமையற்காரன் மிக மிக நம்பிக்கையுள்ளவனாகவே இருப்பான்.

"சிந்துச்சமையல்" என் இரண்டாம் ரகச் சாப்பாடு பூஜைத் தம்பிரான், கார்வார் தம்பிரான் ஆகிய கௌரவ மிக்க ஒரு சிலருக்காகத் தயாராவது. முழுவதும் நெய்யிலே தயாரான உணவாக இல்லாவிட்டாலும், நேர்த்தியாக பாகம் செய்யப்பட்ட சிறந்தசாப்பாடாகவே இருக்கும். திடீரென வரும் பெரியதனக்காரர்கள் - பிரபுக்களுக்கு இவ்வுண்டி கிடைக்கும். மற்றும் வெளியூர்களிலிருந்து கட்டளைத் தம்பிரான்கள் வந்தால் அவர்களுக்குண்டு.

"பந்திச் சாப்பாடு" இதுதான் மூன்றும் ரகம். இது மிகவும் மட்டரகமாய் இருக்கும். இதுதான் உழைப்பாளிகள் அனைவருக்குமுரியது. "முதற்பந்தி" அதாவது சைவர்களுக்கு மட்டும் நடக்கும் சாப்பாட்டை விட ஓடியாடி உழைத்து நிலத்தில் பாடுபட்டு களைத்து வந்துள்ள பாட்டாளிகளுக்கு பகல் சுமார் இரண்டு

மணிக்குமேலாகப் போடப்படும் இந்தச் சாப்பாடு வடிகட்டிய மட்டரகமாகத்தான் இருக்கும். பந்திச் சாப்பாடானது சாம்பார், ரசம், ஒரே பதார்த்தம், மோர் இவைகளோடு முடிந்துவிடும்.

" காரென்று பேர்படைத்தாய்
கசனத்து றும்போது
நீரென்று பேர்படைத்தாய்
நீணிலத்தில் வந்ததற்பின்
வாரென்று மென் முலையர்
ஆய்ச்சியர் கைப்போந்த பின்னர்
மோரென்று பேர் பெற்றாய்
முப்பேரும் பெற்றாயே"

எனப் புலவர் கூறியதை நிரூபிக்கும் பந்தியில் பரிமாறப் படும் மோர். நெய்யானது முழக்கணக்கிலே அளந்து ஊற்றப்படுவது இவர்கள் பந்தியிலே காணலாம். ஆடைத்தயிரும் புத்துருக்கு நெய்யும் சத்துள்ள காய் கறிகளும் சீரகச் சம்பா அரிசியும் இந்தச் சமையலுக்கு ஏற்காதவை. வாடிக்கையில் உள்ளவர்களையன்றி, எந்தச் சிப்பந்தியும், 'பந்தி மணியக்காரன்' பண்டாரச் சந்நிதிகளிடம் உத்தரவு பெற்றுவந்தாலன்றி சாப்பிட முடியாது. காரியஸ்தர்கள் இத்தனை நாட்கள்தான் சாப்பிடலாம் என்ற கணக்கும் சில மடங்களிலே உண்டு. இரவு பந்தி நடப்பதற்கு 'அந்தானம்' என்று கூறுவர்.

இலாபம் சம்பாதிப்பதற்கென்றே இருக்கும் சிறிய சாப்பாட்டு விடுதிகளில் கூட சிப்பந்திகள் வயிறாரச் சாப்பிட்ட மீதமே விற்பனைக்கு வரும். அன்ன தானத்திற்கென்றே சிலர் மான்யமளித்திருந்துங்கூட ஆதீனங்களிலே பாடுபடும் பாட்டாளிகள், சோறு கிடைப்பதற்குச் சொர்க்கலோகம் போய்த் திரும்ப வேண்டும். இரவு சாப்பாடு அழுவதா சிரிப்பதா என்றிருக்கும். ரசம் போன்ற வத்தல் குழம்பும், பசையற்ற

பருப்புத் துவையலும் பரிமளிக்கும் இங்கு. வழக்கச் சொல்லிலே "வரிச்சாணி" எனச் சொல்லும் கொத்தவரையும் "அல்வாத்துண்டு" எனக்கூறும் பரங்கி, பூசணியும், மதமடக்கிப்பூண்டு எனப்படும் கீரைத்தண்டும் தான் பெரும்பகுதி பந்தியிற் புகுத்தப்படும் காய்கறிகளாயிருக்கும்.

சில மடங்களிலே இந்தப் பந்திக்கு வருடத்தில் சில முறைகளே மடாதிபதிகள் வருவர். சில மடங்களில், இவர்கள் வந்துதான் பந்தி நடக்கவேண்டும். "பசி" என்றால் என்ன என்று கேட்கும் நிலையில் சோற்றுத் துருத்தி பருத்திருக்கும்போது, பசியுடன் மக்கள் தன் வரவிற்கு காத்திருப்பரே என்ற எண்ணம் இவர்கட்கு ஏற்படக் காரணம் ஏது? இஷ்டம்போல் எப்பொழுது வேண்டுமானாலும் வருவர். காலம் தாழ்த்துக்கூட வருவர். தலைவர் வராத காலத்திலாவது சிப்பந்திகட்கு சௌகர்யம் உண்டு. வந்தாலோ வாய் மூடி மௌனிபோல் தான் இருக்கவேண்டும். தொண்டையடைத்தாலும் தண்ணீர் கேட்கும் சப்தம் வெளியே வரக்கூடாது. பரிமாறுபவர் தன் இலைப் பக்கம் வரும்போது தான் எதையும் பெற முடியும்.

அறுசுவை உண்டியோடு தலைவரும, உப்பு சப்பற்ற உணவோடு மற்றையோரும் ஒரே பந்தியில் சாப்பிடுவதை இவர்களிடம் காணலாம்.

"குருபூஜை" என்றும் ஆண்டு விழா மற்றும் பொங்கல் போன்றுள்ள வருடத்திற்கொரு திருநாட்களில், மகா சந்நிதானம் கண்டிப்பாக வந்துதான் சாப்பாடு நடக்கவேண்டும். அக்காலங்களிலே நூற்றுக்கணக்கான மக்கள் இருப்பர். அன்று மடாதிபதிக்கு குறுக்கும் நெடுக்குமாக ஐந்து தலைவாழை இலைகள் போடப்பட்டிருக்கும். சத்திரத்துச் சாப்பாடு, சித்துச் சமையல், பரிகலம், பந்திச் சாப்பாடு, சித்திரான்னங்கள் முதலியன தேவதைகளுக்குப் படையல் போடுவதுபோல ஏராள

மாக பரிமாறப்பட்டிருக்கும். அப்பளம், வடை, லட்டு முதலான பக்கப்பண்டங்களும், குறுத்திலைத் தொன்னை களும் பக்கவாட்டில் உள்ள இலைகளில் அடுக்கிவைக்கப் பட்டிருக்கும். இது தான் "மகேஸ்வர பூஜை" எனப்படு வது. பண்டாரச் சந்நிதிகட்கும் மற்றையோர்க்கும் அர்ச்சனை தீபாராதனை ஆசீர்வாதங்கள் எல்லாம் நடந்து தான் சாப்பிட ஆரம்பிக்கவேண்டும். அதுவரை முழங் காலில் பசியுள்ள மடாதிபதிகள் முன்னிலையிலேயே அடிவயிற்றில் பசியுள்ள அத்தனை பேரும் காத்திருக்க வேண்டும். பண்டாரச் சந்நிதியின் பக்கமிருந்து பரிமாற மூவர் காத்திருப்பதோடு, உணவு முடியும் வரை ஒரு தம்பிரான் விசிறிக்கொண்டே இருப்பார். இவர் எழுந்த பின் கையலம்பத் தண்ணீர் கொடுத்து கை கால் துடைத்து, யதாஸ்த்தானம் சேர்த்துவிட்டு, தம்பிரான், முதலில் குரு மகராஜ் சாப்பிட்ட இலையில் தான் சாப் பிட உட்காருவார். நாலு பேர் ஆளுக்கொரு இலையாக இழுத்துக்கொண்டு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்து விடுவர். அத்யந்த விசுவாசமுள்ள தம்பிரான்களுக்குத் தான் அந்த "பரிகலம்" சாப்பிடும் பாக்கியம் கிடைக் கும். விசேஷமோ, சட்டமோ என எப்படிவைத்துக் கொண்டாலும் அந்த இலையிலே உயர்ந்த ருசியுள்ள பண்டங்கள் உணவுப்பண்டங்கள் ஏராளமாக மீத மிருக்கும்.

தவசிக்கு தங்கப்பல்லக்கா ?

குருபூஜையாகிய ஆதிதலைவர்களின் திதியானது பல மடங்களிலே பலவாறு கொண்டாடப்படும். ஒரு நாள், இரண்டு நாள் நடப்பதுண்டு. பத்து நாட் கள் மெத்த ஆடம்பரத்தோடு நடத்தப்படுவதுமுண்டு. குருபூஜையில் தான் இவர்கட்கு பட்டணப்பிரவேசம், கொலு முதலியன நடக்கும். பட்டணப்பிரவேசம்

இரவு சுமார் 10 மணிக்குப் புறப்பட்டால், காலை ஆறு அல்லது ஏழு மணியாகும், இறங்குவதற்கு. இதற்கு நாதஸ்வரத்தில் அத்தனை வித்வான்களும், சின்ன மேளம் என்றும் இவர்கள் ஆதீனத்திற்கு உட்பட்ட தேவஸ்தானங்களில் உள்ள தேவரடியார்களும், இன்னும் பாண்டு வாத்யம், பொய்க்கால் குதிரை, மயில் டான்ஸ், சிலம்பங்கள் உயர்ந்த வாண வேடிக்கைகள் மற்றும் எவ்வளவு ஆடம்பரங்கள் உண்டோ அவ்வளவுமிருக்கும். சுமார் 200, 300 கியாஸ் லைட்டுகளுக்கும் வேலையுண்டு. இந்த வெளிச்சம் போதாதென்று நூற்றுக்கணக்கான தீவர்த்திகளும் இருக்கும். "எடுபிடி" களான ஏறக்குறைய இருநூறு விருது சாமான்களை இரு வரிசைகளில் ஆட்கள் தூக்கி நிற்பர். இவற்றிற்கு பெரும் பகுதி வெள்ளிச்சாமான்களாகவே இருக்கும்.

மடாதிபதி இம்மாதிரி தங்கப் பல்லக்கிலே ஊர்வலம் வரும்போது தம்பிரான்கள் இரண்டு பக்கமும் பெரிய விசிறிகளால் விசிறுவர்; சாமரம் போடுவர் ;

முன்னே யானை, டமாரம், மகரதோரணங்கள் முதலியனவும் போய்க்கொண்டிருக்கும். மக்கள் தங்கள் வீடுகளிலே திருவிளக்கேற்றி, பூரண கும்பங்கள் வைத்து, தேங்காய் (பழம்) உடைத்து, கற்பூரம் கொளுத்தி சாஷ்டாங்கமாக தரையிலே விழுந்து நமஸ்கரித்து, சந்நிதானத்திடம் விபூதிப் பிரசாதம் பெற்றுக்கொள்வர். மரியாதைக்காக இரண்டு வேஷ்டிகளைச் சுற்றி பல்லக்கின் கொம்புகளில் போடுவர். இவையெல்லாம் தூக்குவோராலும், தட்சிணை பரிசாரகர்களாலும் பகிர்ந்து கொள்ளப்படும்.

ஊர்வலம் மடத்திற்கு வந்த பின்னர் தான் கொலு நடக்கும். மிகுந்த பொருட்செலவில் நிறைந்த

அலங்காரங்களோடிருக்கும் மண்டபத்தில் மடாதிபதியை உட்காரவைத்து, பாவனை அபிஷேகங்கள் முடித்து, அலங்காராதிகள் நடந்து சோடசோபசாரங்கள் தீபாராதனைகள் சுவாமிகளுக்கு முடிந்தபின் அவர் எழுந்து பக்தகோடிகளுக்கு விபூதிப்பிரசாதம் கொடுத்து, மாலைபோட்டு மரியாதை செய்வர்.

இந்தக் கொலு சில மடங்களிலே பத்து தினங்கள் நடக்கும்.

இந்தக் கொலுவில் தான் பண்டாரச் சந்நிதிகளுக்குப் பாதகாணிக்கைகள் ஆயிரக்கணக்கில் சமர்ப்பிக்கப்படும். மாகாண முழுதுமிருந்து பல துறையிலுமுள்ள வித்வான்கள், பண்டிதர்கள், பட்டதாரிகள், பத்திரிகாசிரியர்கள், பத்திரிகை பிரதிநிதிகள், பக்தகோடிகள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள், பிரபுக்கள், பெரிய தனக்காரர்கள், முதலியோர் ஆயிரக்கணக்கில் விஜயம் செய்திருப்பர். சினிமா நட்சத்திரங்களான ஆண்களும், பெண்களும் கூட வந்திருப்பர். பெண்களின் கச்சேரிகள் தான் பிரமாதமாக இருக்கும்.

இவர்கட்கெல்லாம், 'வித்வத் சம்பாவனை' என்ற முறையில் மறுதினம் மரியாதை நடக்கும். பொன், பொருள், ஆடை, பட்டம் முதலியன ஆட்களின் தராதரத்தைப் பொறுத்தும், ஆதீன கர்த்தரின் அருட்கண்ணோக்கத்தைப் பொறுத்தும் அவர்களுக்குள்ள அதிர்ஷ்டத்தை பொறுத்தும் அமோகமாகக் கிடைக்கும். இதற்கு "அனுப்பு" என்று பெயர்.

சமாதியா? புதையலா?

இம்மடத் தலைவர்களை நியமிக்கும் பொறுப்பு மடாதிபதி ஒருவருக்குத்தான் உண்டு. நிர்வாகஸ்தர்

கள், பெரியதனக்காரர்கள், பக்தகோடிகளின் அபிப்பிராயங்கள் கலக்கப்பட்டாலும், தலைவர்களின் ஏதேச்சாதிகாரமே இதில் வெற்றிபெறும். "ஏன்?" என்று கேட்கவோ, "இவர் கூடாது" என்று சொல்லவோ எவருக்கும் அதிகாரம் இல்லை. "நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்" என்பதெல்லாம் இங்கு தலைகாட்ட முடியாது. நடுத்தெரு நாராயணன் ஒருவனை நியமித்தால் கூட "நல்லவர்" என்று போற்றிப் புகழ்ந்து காலில் விழுந்து கும்பிட்டு, ஏற்றுக்கொள்ள வேண்டியதைத் தவிர, மறுப்பதற்கு மட(ச்)சட்டத்தில் இடமில்லை.

மடாதிபதி உயிருடன் இருக்கும்போது சின்னப் பண்டாரச் சந்நிதி நியமிக்கப்பட்டு, இருவரும் ஒருமித்து வாழ்வதுண்டு. இன்றேல் பண்டாரச்சந்நிதிக்கு இறந்துவிடுவோம் என்ற எண்ணம் உதித்த பின், தனக்கு நல்ல பிள்ளையாக நடந்த ஒருவருக்குத் தலையிலே தண்ணீர் ஊற்றுவதான ஆச்சாரியாபிஷேகத்தைச் செய்து ஆதீனத்தலைவராக்கிவிடுவதும் உண்டு. சின்னப்பட்டம் நியமிக்கப்படாமல் பெரிய பட்டம் இறந்துவிட்டால், அதிர்ஷ்டப் பிரைஸ் அப்பொழுதுதான் தெரியும். அதிகாரமுள்ளவரோ காரியசாதிப்பில் கைதேர்ந்தவரோ, ஆதிக்கமுள்ளவரோ, கையாட்கள் உள்ளவரோ, யாரேனும் ஒருவர் மகாசந்நிதானம் ஆகிவிடமுடியும்.

தலைவரான சவத்தின் கையில் சகல கிரியைகளும் செய்யப்பட்ட ஒரு செம்புத் தண்ணீரைக் கொடுத்து அதைக் கீழே உட்கார்ந்திருப்பவர் தலையிலே ஊற்றிவிட்டால் அவர்தான் அதுமுதல் ஆதீன தலைவர். உள்ளூரில் சீடர்கள் எவருமே இல்லாவிட்டால் விவகாரஸ்தரும் விநயமுள்ளவருமான வெளியூரிலுள்ள கட்டளைத் தம்பிரான்களில் ஒருவரை ஆதி குருமூர்த்தியின் கோமுகையில் உட்கார

வைத்து, குருநாதனுக்கு அபிஷேகம் செய்யும்போது அந்தத் தண்ணீர் தலையிலே விழுந்தால் அதுவே போதும் மடாதிபதி ஆக்கப்படுவதற்கு. மற்றபடி தேர்தல் முறையோ, ஓட்டெடுப்போ எதுவும் செல்லு படியாகாது, மட(ச்) சட்டத்தில்.

மடாதிபதி இறந்தால் அவருக்குச் சகலவிதமான திரவியமுங்கொண்டு அபிஷேகம் நடத்தி, அலங்காரங் கள் செய்து, பட்டணப்பிரவேசம் வரும் அதே பல்லக் கில் வைத்து ஊர்வலமாக சவக்குழிக்கு எடுத்துக் கொண்டு போகப்படும். பட்டணப்பிரவேசம் போன்ற எல்லா ஆடம்பரங்களும் இதற்கும் உண்டு. வீடுகளில் தீபாராதனைகளும் நடக்கும். சில சமயங்களில் பொற் பூக்கள், வெள்ளிப் பூக்கள் வாரி இறைக்கப்படும்.

சமாதிக் குழியிலே பவுன் காசுகளும் வெள்ளி நாணயங்களும் கௌரவத்திற்காக சாமிகள் தலையிலே அள்ளிக் கொட்டப்படும். நித்தியப்படி ஆபரணங்க ளான "சுந்தர வேடம்" "ஆறுகட்டி" "கண்டி" போட்டபடியே புதைத்து விடுவர். காசி முதல் கன் னியாகுமரி வரையில் உள்ள க்ஷேத்திரங்களிலிருந்து வந்த தீர்த்தங்களும், பிரசாதங்களும் அப்படியே தலை யிலே கொட்டி விடுவார்கள். பின்னர் விபூதி, செங்கல் தூள், உப்பு முதலியனவற்றை மூட்டை மூட்டை யாகக் கொட்டி மூடி விடுவார்கள்.

இதற்கு பத்து தினங்கள் நித்யப்படி அபிஷேக ஆராதனைகள் நடக்கும். பத்தாவது நாள் ஏராளமான பொருட் செலவில் நினைவு நாள் கொண்டாடப்படும். அன்று பின் வாரிசாக வந்தவர்களுக்கு பட்டணப் பிர வேசம், கொலு முதலியனவும் நடப்பதுண்டு. மறு வரு டத்தில் இந்த சமாதியில் கோவில் போன்று கட்டிடம் கட்டி விடுவர். இவை தான் "குரு மூர்த்தம்" என சொல்லப்படுபவை. இவை வரிசையாக ஓர் பெரிய

தோட்டத்திலிருக்கும். தக்க பந்தோபஸ்தும் உண்டு. இன்று பிரபலமாயிருக்கும் மூன்று மடங்களிலும், இதைப்போன்று ஏறக்குறைய அறுபது சமாதிகளிருக்கின்றன.

மடாதிபதிகள் சில சமயங்களில் ஸ்தல யாத்திரை போவதுண்டு. அந்தக் காலங்களில் ஆயிரக் கணக்கான ரூபாய் அள்ளி வீசப்படும். நாள் ஒன்று இருபது மைலோடு தான் இவர்கள் பிரயாணம் நிற்கும். மேனுவில் தான் இவர்களைத் தூக்கிக் கொண்டு போவார்கள். மடத்திலிருப்பது போன்று சகல தளவாடச் சாமான்களும் உடன் செல்லும்.

இவர்களின் ஆத்மார்த்த பூசைப்பெட்டியை தம்பிரான் ஒருவர் தலையில் சுமந்து நடந்து செல்ல வேண்டும். இது நாதஸ்வரம், எக்காளம், திருச்சின்னம், முதலிய வாத்தியங்களோடு நடையிலே சென்று கொண்டிருக்கும். பூஜை புறப்பட்ட பின்னர் தான் பண்டாரச் சந்நிதி புறப்படுவார், பல்லக்கிலே. இவரது சிவிகை, நாற்காலி பல்லக்கு முதலியனவும் பின்னே தூக்கிச் செல்லப்படும் பத்து பதினைந்து வண்டிகளும் பல்லக்கைத் தொடரும்.

யானைகளும் கௌரவத்திற்காக கூடச் செல்லும். இவர்களுக்கு உள்ள வெள்ளி கைதீவர்த்திகளும் எடுபிடி சாமான்களும் வரிசையாக உடன்போகும். இவர்களுடன் லாரி, பிளஷர்களும், பிரசார "வான்" ஒன்றும் இவர்களைப் பின் தொடரும். இதன்றி மடத்திலே சகல வசதிகளும் அமைக்கப்பட்டு அழகுள்ள சலூன்களும் உண்டு. ஏறக்குறைய இரு நூறு ஆட்களோடும் இவ்வளவு ஆடம்பரத்தோடும் இவர்கள் ஸ்தலயாத்திரை நடக்கும். தனியொரு மனிதன் சாமி கும்பிடப் போவதற்கு ஆயிரக் கணக்கான ரூபாய்கள் அழிக்கப்படுவதும், ஆட்களுக்கு சிரமம் தருவதும், சட்டம்,

சம்பிரதாயம் என்ற ஆதிக்கத்திலே கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. இது ஆஸ்திகர்களால் போற்றப்படு கிறது. "இது நியாயமா?" "இது தேவையா?" என்று கேட்பவன் அவர்கள் அகராதிப்படி நாஸ்திகன் ஆகிருன்.

வெளி வேஷம் எதற்கு?

சைவ சந்யாச பந்ததிப்படியும், நித்யகன்ம நெறிப் படியும் இவர்கள் சரியை கிரியை யோகங்களை ஒழுங்கு முறைகளோடு வழுவாது செய்து முடித்து சாப்பிட உட்கார்ந்தால், சாயங்காலமாகிவிடும். எனவே, இச் சந்யாசிகளுக்குப் பெரும்பாலும் நாள் ஒன்றுக்கு ஒரு வேளை உணவோடு இருக்கும் நிலையில் இவர்கட்கு வைதீக காரியங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஒரு வேளை உணவும் இவர்கள் உடம்பில் சாராத அளவுக்கு இவர்களுடைய வேஷங்கள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன.

காவியுடை. இது கடுமையான உஷ்ணமுள்ள ஓர் ஆடை. உடலின் ரத்த வலுவை உருக்கும் தன்மை யுடையது. விபூதி உத்தூளனம் என்று உடம்பில் நிறை யப் பூசுவதானது இவர்களின் இரத்தவலுவை குறைக்க ஏற்பட்டதேயாகும். தஞ்சை ஜில்லாவிலே பெரும் பகுதி மாட்டிற்கு கொம்பு தீய்க்கும் பழக்கம் உண்டு. மாட்டிற்கு மிகுந்த வலுவுள்ளது கொம்பு. உடற்சத்து முழுதும் கொம்பிற்சார்ந்து மாடுகளின் வலுக்குறை கிறது என்று தான் கொம்பு தீய்க்கும் பழக்கம் இங்கு கையாளப்படுகிறது.

இதே போன்று உடலின் சத்து தலைமயிரிலே சாரட்டும் என்ற கருத்துக்கொண்டே இம்மடாதிபதி கள் சடைவளர்க்க வேண்டும் என்ற சட்டம் ஏற்படுத்

தப்பட்டிருக்கிறது. அதாவது உடலிற்சாரும் சிறு பகுதி உணவுச்சத்துக்களின் பெரும்பாகம் சடையில் சார்ந்து உடலை வலுவறச் செய்யட்டும் என்பதே மூலப் பொருள். இந்தச் சடையைப்பற்றி பலர் பலவாருன தப்பபிப்ராயம் தருவர். ஆலம்பாலால் ஆக்கப்படுகிறது என்பர்; மொட்டை யடிப்பவரின் தலை மயிரைக் கொண்டு ஒட்ட வைப்பதால் உருவாக்கப்படுகிறது என்பாருமுண்டு. இவையெல்லாம் தவருன அபிப்ரா யங்கள்.

வாலிபப் பருவமுதல் வளர்க்கப்படும் இந்தச் சடை யானது இயற்கையே யன்றி செயற்கையல்ல. சுமார் ஐம்பது வயதில் அவர்கட்கு இரண்டு பாகங்களுக்கு மேலாக வளர்ந்துவிடும். சம்பிரதாயப்படி சிலர் ஆரம் பத்தில் சடைவளர்த்தாலும், வளரவில்லை என்ற காரணங் காட்டிப் பிரித்து விடுகின்றனர்.

இவர்களின் ஆண்மை இவ்வாறு வீணுவதோடு போதாக்குறைக்கு பாதரட்சையும் புகுத்தியிருக்கின்ற னர். சிறுநீர் சம்பந்தமான உஷ்ண வியாதி ஏற்பட் டால், அதற்கு கால் பெருவிரல் நகத்தில் சுண்ணும்பு போடுவதுண்டு. உடனே நோய் நிவர்த்தியுமிருக்கும். காரணம், நேரான நரம்பின் தொடர்பு. அதே போல பெருவிரலின் முழு பலத்தால் இயங்கப்படும் குமிழ்க் கட்டையாலும் இவர்களின் ஆண் தன்மை குறைபட வேண்டியே பாதரட்சை போட வேண்டும் என ஏற் பட்டது. இது இப்பொழுது கௌரவமாக ஏக தேசத் தில் உபயோகிக்க வெள்ளியாலும், தங்கத்தாலும் ஆக் கப்பட்டு விட்டது.

சின் முத்திரை சுகாசனத்து அமர்ந்து இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்களில் படும்படி நீட்டி, வலது கைமேல் நோக்கிக் காட்டி, ஆட்க்காட்டி விரலை வளைத்து, பெரு விரல் நடு ரேகையைத் தொட்டு,



மூவாசைகளை ஒழித்துவிட்ட மேதைகள்...மடத்து...



கொலு !... பொம்மையல்ல... மகா சந்நிதானம் தான்

மற்ற மூன்று விரல்களும் இணைந்திருக்கக் காட்டுவதே சின்முத்திரையாகும். சுண்டு விரல், நடு விரல், மோதிர விரல்களாகிய ஆணவம், கன்மம், மாயையான மும் மலங்களோடு இணைக்கப்பட்டுள்ள ஆட்காட்டி விரலான ஆன்மாவானது மும்மலங்களையும் நீக்கி, கட்டை விரலான சிவனடியைச் சேர்ந்து விட்டது என்பதே சின் முத்திரையின் பொருள். அதாவது மும்மலங்களை யும் நீக்கி சிந்தையை சின்பாற் செலுத்துகிறேன். நீங்களும் செலுத்துங்கள் என்பதாகும். ஆனால், இந்த சின் முத்திரையானது, தாங்கள் பத்து விரல்களிலும் அணிந்திருக்கும் நவரத்ன மோதிரங்கள் நன்றாகத் தெரிய வேண்டும் என்பதற்குக் காட்டவே பயன்படுகிறது.

இவர்களால் காதில் அணியப்படும் ஆறுகட்டி என்பது, காம - குரோத - லோப - மோக - மத - மாச்சர்யம் ஆகிய அறுவகைத் தீய குணங்களையும் அகற்றியதன் அறிகுறியாக ஏற்பட்டது. ஆனால், அவர்கள் அத்தனை குணங்களையும் கொண்டிருப்பதோடு, வைரத்தின் ஜொலிப்பால் மக்களை மயக்கப் பயன்படுத்தவே இதை உபயோகப்படுத்துகின்றனர்.

இவர்கள் கோவிலுக்குச் செல்லும் காலை கைத் தீவர்த்தி, கை விளக்கு, கட்டியக்காரனுடன் செல்வர். சாஸ்திரம் கூறுவதுபோல கோவிலினுள்ளிருக்கும் கடவுள்களைவிட, கோபுரம் மிக்க மூர்த்தி சாந்நித்தியம உடையது. எனவே, கோபுரத்தை நிழலை மிதிக்கக் கூடாது என்பது சட்டம். ஆகவே, விளக்குடன் சென்றால், அந்நிழல் மறைக்கப்பட்டுவிடும்—இதற்காக ஏற்பட்ட தீவர்த்திகளும், விளக்குகளும் இன்று ஆடம்பரத்திற்காக வெள்ளியாலாக்கப்பட்டுவிட்டன.

அடுத்தபடி இவர்கள் ஆண்டவனிடம் தங்கள் சிந்தையை ஒரு நிலைபடுத்தி உலகை மறந்து நிற்ப

தால், இவர்கள் நடக்கும்போது, கௌரவமிக்க இரு தம்பிரான்களின் கைகளை பிடித்துக்கொண்டுபோகும் கைலாகுடன் செல்வர். அப்படி நடக்கும் போதும் கட்டியக்காரன், மேடு, பள்ளம், படி என்று கூறிக் கொண்டே முன்னிருந்து வழி காட்டிச் செலவான்.

இவர்கள் சாமி சந்நிதியில் நிற்கும் போது, தன்னை மறந்து சர்வேஸ்வரனிடம் மனதைப் பறி கொடுத்திருப்பர் என்பதற்காக, கற்பூர ஆரத்தி நடக்கும்போது சகல வாத்தியங்களையும் 'திடுதிடு' வென முழக்குவதுண்டு. இது இன்று மதிப்புக்காகக் கை யாளப்படுகிறது.

எனவே, இந்தப்படியாக வைதீக காரியங்கள் அனைத்தும், உலகை மறந்து ஒரு தனி முதல்வனிடம் உள்ளத்தைச் செலுத்தும் கள்ளமில்லாத் துறவிகள் கைக்கொள்ளவேண்டி ஆக்கப்பட்டன. ஆனால், அவை யனைத்தும் இன்று அதிகார ஆணவத்தால் ஆடம் பரத்திற்புகுத்தப்பட்டுவிட்டது.

யார் யோகி? யார் போகி?

இந்தத் துறவிகளே கூறுவர், பட்டினத்தார் பத்திரகிரியைக் "குடும்பி" என்று கூறியதாக. மன மாரத் துறவு பூண்ட மன்னன் கையிலே பிச்சை யெடுக்க மண் சட்டியும் எச்சில் உண்ட நாயுமான இரண்டும் இருக்கும் போதே, 'இல்லறஸ்தன்' என இடித்துக்கூறினர். இதை இவர்கள் ஏற்கிருர்களா? மறுக்கிருர்களா? பத்திரகிரியையும் பட்டினத்தாரை யும் போற்றிப் புகழுமிவர்கள் இகலோக, சுகபோகங் களான எல்லா இன்பங்களையும் அனுபவித்து ஆனந் தித்து வருகிருர்களே, இவர்களை எப்படி அழைப்பது?

அமரர் மகாத்மாவைப் போற்றிப் புகழும் இவர்கள், அவர் கொள்கைகளை பின்பற்றுகின்றனரா? சத்தியம், அஹிம்சை, சாத்மீகம் இவைதானே மகான் காந்தி செய்துவந்த சங்கநாத உபதேசம்! இதில் எதையாவது இம்மடாதிபதிகள் கைக்கொண்டிருக்கின்றனரா தங்கள் வாழ்க்கையிலே?

சபர்மதியிலே காந்திஜீ ஆரம்பித்த ஆண் பெண் இரு பாலாருள்ள சத்யாகரக ஆஸ்ரமத்தின் விதிகளிலே 'உணவு மிக எளியது! மிளகாய் வாலக்கு, உப்பு, மிளகு, மஞ்சள் தவிர, மற்றவை சேர்ப்பதில்லை. பாலும், அதன் பரிணமங்களும் பிரம்மச்சரிய வாழ்விற்கு தடையாயிருப்பதால் அரிதே உபயோகிக்கப்படும்" என்று பிரதானமாகக் கையாளப்பட்டது.

மடாதிபதிகளின் உணவிலே இவை கையாளப்படுகிறதா? இவற்றை சேர்த்துக்கொண்டாலும் தொலையட்டும். சத்துள்ள எத்தனை உணவுப் பண்டங்களை உபயோகிக்கின்றனர். இவர்கள் யோகியரா? அல்லது காந்திஜி யோகியா?

அவருடைய காருண்ய சித்தம் இவர்களுக்கு இருக்கிறதா? தன்னல வெறுப்போ மறுப்போ இவர்களிடமுண்டா? பொதுநல சேவையோ தொண்டோ இவர்கள் புரிகிறார்களா? நாட்டு மக்களின் நலத்திலே நாட்டம் செலுத்துகின்றனரா? தனக்கென வாழா பிறர்க்குரியாளராக இவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்களா? தீண்டாமை விலக்கியுள்ளார்களா? பெண்ணிற்கு பெருமை தருகின்றார்களா? மத ஒற்றுமைக்கு இடம் கொடுக்கிறார்களா? அனைவரும் சமம் என மதித்து நடத்துகிறார்களா? ஆடம்பர வாழ்க்கையை அவமதித்து வருகிறார்களா? மனிதனை மனிதன் வருத்தல் கூடாதென்ற மனப்பான்மையோடாவது இருக்கிறார்களா?

இவையனைத்தும் உலகம் போற்றும் உத்தமனின் உன்னதக்கொள்கைகளல்லவா? மகாத்மாவிடம் மடாதிபதிக்கு உண்மையான அன்பும் விஸ்வாசமும் பக்தியும் இருக்குமானல், இன்னும் தான் மத குரு என்று சொல்லிக்கொண்டிருப்பதா முறை? மதபேதத்தால் மக்கள் மாக்களாகமாறி மடிவதைத் தடுக்கவே படுபட்டார் மகான்! மதத்தின் வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை உண்டாக்கவே உழைத்தார் உத்தமர் காந்திஜி! அனைத்துள மக்கட்கும் ஆண்டவன் பொது என்பதை ஆதாரமாகக்கொண்டு தானே தொண்டாற்றினுர் அமரர் காந்திஜி!

ஆனல், அத்தகைய உத்தமோத்தமர் அடங்காத மதவெறி கொண்ட அயோக்கியனல் அநியாயமாக ஆவிநீக்கப்பட்டார். மக்கள் நலன் நாடிப் பிரார்த்திக்கச் சென்றபோது, மதப்பித்துக்கொண்ட மடையனல் சுட்டுக் கொல்லப்பட்டார். அஹிம்சா மூர்த்தியான அவர் மேற்பாய்ந்த மூன்று குண்டுகளும் அகிலத்திலுள்ள மனித இதயம் படைத்த மக்கள் அனைவர் மார்பிலும் பாய்வதுபோன்ற தாக்குதல் தானே அடைந்தனர்.

இத்தகைய கொடுமையை நிகழ்த்தியது மதம் தானே? இந்தக் கோரக்கொலையை நடத்தியது மதம் தானே? தூண்டாவிளக்குப் போன்ற ஒரு ஜோதியை அணைத்தது மதம் தானே? சத்தியம் சாத்மீகத்திற்கு இருப்பிடமான ஓர் சத்புருஷச் சந்யாசியைச் சாம்பலாக்கியதும் மதம்தானே? மக்கள் இதயத்திலே மாபெரும் இடிவிழுந்து, அதன் எதிரொலி இன்னும் அதிர்ச்சி தரும் நிலையைத் தந்தது மதம் தானே? முன்னளில் மகான்கள் பலரும் மதவெறியால் சித்ரவதை செய்யப்பட்டு மடிந்ததை, இந்நாளிலும் நடைமுறையில் காட்டியது மதம் தானே? மன்னுதி மன்னனும்



வாகனங்கள், எடுபிடி சாமான்கள் அனைத்தும் வெள்ளிதான்



அகிம்சா மூர்த்தி, சாத்மீகத் தந்தை, மகாத்மா காந்திஜி

மகானின் பேட்டிக்காக காத்திருந்து போற்றிப் புகழ்ந்த புனிதனைப் பொசுக்கிச் சாம்பலாக்கி மண்ணோடு மண்ணாக்கியதும் மதம் தானே?

இயேசுவை சிலுவையில் அறைந்து இம்சித்தது மத வெறி! உலகம் உருண்டை என்ற கலிலியோவைக் கொன்றது மதவெறி! சிந்தனை செய் என்ற சாக்ரட்டீஸை நஞ்சூட்டிக் கொன்றது மதவெறி! மா பெரும் சமணர்களை கழுவேற்றியது மதவெறி! வாதப்பிரதி வாதத்தால் கணக்கற்றவர்களை நயவஞ்சகமாகக் கொன்றது மதவெறி! சித்தர்களையும், சத்புருஷர்களையும் சித்ர வதைக்குள்ளாக்கி பலிகொண்டது மதவெறி! மக்களை மாக்களாக்கி வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கி, பலி பீடத்திலே வரவேற்புத் தருவது மதவெறி!

அஹிம்சா மூர்த்தி! சாத்மீகத் தந்தை! ஆடம்பர மற்ற யோகி! அடிமையகற்றிய அண்ணல்! தன்னல மற்ற மன்னர் மன்னன்! பொது நலத்தொண்டைப் போற்றிய புனிதன்! மக்களை வாழ்விக்க வந்தமகான்! மாநிலம் போற்றும் மகாத்மா! ஓயாது உழைத்த உத்தமர் ஆகிய காந்திஜீயின் உயிரைக் குடித்து கதறிக் கண்ணீர் சிந்தும் மக்களை கண்ணைக்கட்டி காட்டிலே விட்டதுபோல் செய்திருப்பதும் அதே மதவெறி தானே?

அத்தகைய மதவெறியிலே, மதக்கோட்டையிலே, மதப் பாதுகாப்பிலே, மதச் சட்டங்களோடு மத சமா தானங்காட்டி, மத பரம்பரையைக் கூறி, மந்தகாச வாழ்விலே மமதையோடு இருந்துகொண்டு மக்களின் முற்போக்குக்கு இரத்தம் உறிஞ்சும் அட்டைகள் போலுள்ள மடாதிபதிகள் மனமார மகாத்மாவை போற்றுபவர்கள் தானா? என்பது சிந்திக்க வேண்டிய விஷயம்.

மமதையால் மதங்கொண்ட இத்தகைய மதமழியப் பாடுபட்ட மகானைப் பின்பற்றும் மடாதிபதிகள்;

எந்த மதம் எதிரிலா ஏந்தலைக் கொன்றதோ, அந்த மதத்தை அடியோடு ஒழித்து, அண்ணலின் தத்துவமான அஹிம்சை, சத்தியம், சமத்துவம், சாத்மீகத்திற்கு இடமளிக்கவேண்டாமா? காந்திஜீயைப் போற்றும் சாந்த யோகிகளாயிருப்போர், கொடுமைக் களஞ்சியமாயிருக்கும் குப்பை கூளம்போன்ற தங்கள் மதத்தை மாற்றி "காந்தி மதம்" என்ற பெயரிலே மறுமலர்ச்சி கொடுத்து, மதத்திற்கு புனர்ஜன்மமல்லவா தந்திருக்க வேண்டும்.

காந்திஜீ காலமான பின்னர், அவரது ஆஸ்தி என்ன மீதமிருந்தது? மூக்குக் கண்ணாடி, ஜெபமாலை, பிளாஸ்க், பிளேட், கரண்டி, நூல்சிட்டம், ராட்டை, செருப்பு, இரத்தந்தோய்ந்த ஆடை இவை போன்ற சிலவன்றி வேறு காணோம். இவர் துறவியா? இன்றேல், அனுபவித்தது போதாதென்று இறந்த பின் கூட பொன்னும், பொருளும், மணியும் மற்றவையும் "உடன்கட்டை ஏறல்" போல தன்னுடன் போட்டுப் புதைக்கச் சட்டமாக வைத்துக்கொண்ட மடாதிபதிகள் துறவிகளா?

"காவியும் உடுக்காமல்
காட்டுக்கும் போகாமல்
பூவுலக மக்கள் வாழ
பொதுத் தொண்டு செய்த காந்தி"

என ஆஸ்தான கவி ராமலிங்கம் பிள்ளை கூறுவதை சிந்தித்துப் பாருங்கள்.

எனவே, மக்கட்குப் பயன்படாத மாநிதி பதுக்கியுள்ள மடாலயங்கள் நாட்டிற்குகந்தவைதானா? மடாதிபதிகள் மக்களால் போற்றப்பட வேண்டியவர்கள்தானா? என்பது மிக கண்டிப்பாக மக்கள் கவனித்துக்கொண்டு வரவேண்டிய முக்கிய பிரச்னையாக இருக்கிறது.

மடங்கள் எத்தனை ?

தமிழ் நாட்டில் இன்று பிரசித்தமாயிருக்கும் ஆதீனங்கள் அதாவது பணப்பெருக்கமுள்ள மடங் கள் மூன்று. மாயவரத்திலிருந்து கிழக்கே தரங்கம் பாடிக்குப் போகும் மார்க்கத்தில் மூன்ருவது மைலி லுள்ள தருமபுரம் ஒன்று.

நாரசிங்கன்பேட்டை ரயில் நிலையத்திலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள திருவாடுதுறை இரண்டு. கும்பகோணத்திலிருந்து அணைக்கரை போகும் வழி யில் பத்தாவது மைலிலுள்ள திருப்பனந்தாள் மூன்று. இவற்றை தோற்றுவித்தவர்கள் முறையே குருஞான சம்பந்தர், நமசிவாய மூர்த்திகள், குமரகுருபர ஸ்வாமிகள். இம்மடங்கள் தோன்றிய காலம் ஏறக் குறைய மூந்நூறுக்கு மூன் நானூறு வருடங்களுக் குள்ளாகவே யாகும்.

இம்மடங்கள் திருக்கயிலாய பரம்பரை, நந்தி அருண்மரபு, மெய்கண்ட சந்தானம் என்று அவர் கள் சாஸ்திரம் கூறுகிறது. அதாவது திருக்கயிலா யத் தெழுந்தருளியுள்ள ஸ்ரீகண்ட முதல்வரான தட்சிணமூர்த்தியானவர், நந்தி தேவர்க்கு உபதே சிக்க பின் வரிசைக்கிரமமாக சனற்குமார முனிவர், சத்யஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர், மெய் கண்ட முனிவர் இப்படியான ஆண்டானடிமைக் கிரமப்படி பல குருமார்கள் மூலம் பல சீடர்கள் தோன்றி, சிலர் சில ஆதீனங்களை நிறுவியதாகச் சரித்திரம் கூறுகிறது. நந்தி தேவர் எட்டுப் பேருக்கு உபதேசம் செய்திருக்கிறார். இவ்வாருக திருக்கயி லாய பரம்பரைச் சைவ ஆதீனங்கள் நம் நாட்டில் பதினெட்டு என கணக்கிட்டுள்ளனர்.

இந்த பதினெட்டு ஆதீனங்களில் பல மறைந்து விட்டன. காரணம்: "லோக முழுதுமே மாயம்" என்ற மாயா வாதக் கொள்கையால் பிறப்பு நீங்க ஆண்டவனடியைச் சேரவேண்டும் என்ற பிடிவாதத்தால் ஆதீனத் தலைவர்கள் அதன் சொத்துக்களைப் பாதுகாக்காமல் விட்டதால் அழிந்தவை சில. ஆதீனத் தலைவர்கள் அயோக்கியத்தனமாக நடந்து அளவு கடந்து தீயவழியில் செலவிட்டு, முதலுக்கே மோசம் செய்து, முட்டாள் தனமாய் விரயம் செய்ததால் அழிந்தவை சில.

இந்த பதினெட்டு ஆதீனங்களில் மேற்சொன்ன மூன்று மடங்கள் பணப் பெருக்க விளம்பரத்தால், அயல் நாடுவரை "மதகுரு ஸ்தாபனங்கள்" என அவற்றின் பெயர்கள் பிரபலப்படுத்தப்பட்டுள்ளன. மற்றும் மதுரை, காஞ்சி, குன்னக்குடி முதலான இடங்களில் ஆதீனங்களும் பண்டாரச் சந்நிதிகளும் இருக்கின்றனர். நம் தலைமுறையில் நாமறிய துர்விநியோகத்தால் அழிக்கப்பட்டவை அன்னப்பன் பேட்டை ஆதீனம், சூரியனர் கோவிலாதீனம், சொர்க்கபுர ஆதீனம் முதலியன.

இன்னும் மீத மிருக்கும் மடங்களும் சர்வாதிகார மமதைகொண்ட தலைவர்களால் நாசமாக்கபடாமலிருக்க வேண்டும்—நன் முறையில் சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும் — ஏதேச்சாதிகாரம் இருக்கக் கூடாது என்பதற்காகவே நமது சர்க்கார் அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டு வந்திருக்கின்றனர். எவர்க்கும் பயனின்றி எவ்வித நன்மைக்கும் பயன்படாது வீணாகி இனியும் மடங்களின் சொத்து அழிக்கப்படாமல் ஆக்க வேலைக்குப் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியந்தானே!

யார் மடாதிபதியாகலாம்?

துறவுச் சின்னங்கள் என இவர்கள் சட்டம் கூறு வதற்கிணங்க, காவியுடை யணிந்து, சடை வளர்த்து, சிலர் தங்கள் சம்பிரதாயப்படி மொட்டை யடித்து, விபூதி தரித்து, ருத்திராட்சம் பூண்டு, சிவபூஜை முத லான கிரியைகளை செவ்வனே செய்ய வேண்டியவர்கள் இம்மடாதிபதிகள். தங்கள் வைதீக காரியங்களை முறைப்படி முடித்து, மற்றைய காலங்களில் தமிழை வளர்க்கவும் சைவத்தைப் பரப்பவும் ஆன காரியங் களில் ஈடுபடக் கடமைப்பட்டவர்கள். இம் மடத் தலைவர்களுக்கோ தம்பிரான்களுக்கோ திருமணம் கிடையாது. மடத்தில் சேர வருபவர்களுக்குத் திரு மணமாகி யிருந்தாலும், மனைவி இறந்திருந்தாலும், அவர்கள் மடத்திற் சேர்ந்து தம்பிரானோ மடாதி பதியோ ஆவதற்கு மட(ச்)சட்டம் இடம் தராது. மடத்துச் சிப்பந்திகள் அனைவரும் மணமானவர்களா கவோ, மணமாகாத இளைஞர்களாகவோ இருப்பர்.

தம்பிரானுக வரக்கூடியவர் பரம்பரைச் சைவ மரபாயிருக்க வேண்டும். மரக்கறி உணவு கொள்ளும் வைதீக குடும்ப வழி வந்தவர்களாக இருக்க வேண்டும். சைவ வகுப்பிற் கட்டுப்பட்ட மேற்குறித்த சட்டத்திற் கடங்கிய பிள்ளை, செட்டியார், முதலியார், தேசிகர், நயினர் போன்ற சில ஜாதியார்கள் தான் தம்பிரான் கள் ஆக முடியும்; பண்டாரச் சந்நிதியாக வரவும் முடி யும். மற்றைய ஜாதியார்களோ, பார்ப்பனர்களோ இதற்கு அருகதையற்றவர்கள். சைவர்களன்றியுள்ள மடத்து சிப்பந்திகள் மாமிச உணவுள்ளவர்களாகவு மிருப்பர்.



பட்டினப் பிரவேசத்திற்கு பயன்படும் பல்லக்கு

சுவர் ஓரங்களில் அடுப்புக் கூட்டி சமைக்கும்

சொத்து அளித்தது யார்?

சைவ மதத்தைப் பரப்பவும் தமிழை வளர்க்கவும் சன்மார்க்க நெறியைப் போதிக்கவும் அன்னதானம் செய்யவுமே இவ்வாதீனங்கள் ஏற்படுத்தப் பட்டன. இதன் தலைவர்களைப் போற்றிப் புகழ்ந்து குருவாக மதித்து கௌரவமளித்ததும் இதுபற்றியே தான். இந்நோக்கங் கொண்டே தமிழ்ப் பெருமக்களால் ஏரா ளமான சொத்துக்கள் மான்ய மளிக்கப்பட்டன, இம் மடங்களுக்கு.

முதலில் குறிப்பிட்ட மூன்று மடங்கள் ஒவ்வொன் றுக்கும் மடத்தின் பெயரால் உள்ள சொத்துக்களுக்கு லட்சக் கணக்காக வருட வருமானம் வருகிறது. இதன்றி தருமபுர ஆதீனத்திற்குட்பட்டது இருபத் தேழு தேவஸ்தானங்கள். வைதீஸ்வரன் கோயில், சீர் காழி, திருக்கடையூர், திருவையாறு, திருவாரூர் ராஜாங்க கட்டளை, திருச்சி மௌனமடக் கட்டளை, பேரளம், ஆச்சாள்புரம், திருவிடைமருதூர் பிச்சைக் கட்டளை, வள்ளலார் கோவில், தருமபுரம் திருநள்ளார் போன்ற பிரபல தேவஸ்தானங்களின் நிருவாக ஆதிக் கமும், உரிமையும் தருமபுரத்தாருடையது. இந்த மடத்துச் சொத்துக்கள் பெரும் பாகம் தஞ்சை ஜில்லா விலும் மற்ற இடங்களிலும் உண்டு.

திருவிடைமருதூர், ஆவுடையார் கோவில், மாய வரம், திருமங்கலக்குடி, சூரியனர்கோவில், திருவாடு துறை போன்ற பதினேரு தேவஸ்தானங்களின் நிருவாக ஆதிக்கம் திருவாடுதுறை ஆதினத்தாருடை யது. இந்த மடத்துச் சொத்துக்கள் பெரும் பகுதி வருமானம் தரக்கூடியவை, திருநெல்வேலி ஜில்லாவி

லிருக்கின்றன. மற்றும் திருவாங்கூர், மதுரை, இராமநாதபுரம் போன்ற பல ஜில்லாக்களிலும் நிரம்ப சொத்துக்களுண்டு.

திருப்பனந்தாள் மடத்துக்குப் பெரும்பகுதி தேவஸ்தான நிருவாகங்கள் கிடையாது. மடத்தின் பெயருக்கே உள்ள சொந்த சொத்துக்கள் ஏராள மிருக்கின்றன. தஞ்சையில் பல கிராமங்கள் இதற்கு ஏகபோக உரிமையோடு இருப்பதோடு, வடநாட்டில் காசி முதலிய இடங்களில் நிரம்ப சொத்துக்கள் இருக்கின்றன. காசியில் "குமாரசாமி மடம்" என்பதும் அதற்குரிய சொத்துக்களும் இம்மடத்திற்கு உரியதே. காசி முதல் கன்யா குமாரி வரையில் பல இடங்களில் இதற்கு சொத்து உண்டு.

பிற மடங்கள் எவை?

முன்னர் சொன்ன மடாதிபதிகள் அன்றி மாறுபட்ட சட்டமுள்ள மடாதிபதிகளும் பலர் இருக்கின்றனர். அதாவது காவியுடை அணியாமல் வெண்ணுடை உடுத்துபவர்கள்; "வெள்ளை வேஷ்டி ஆதீனம்" என்று கூறுவார்கள். வேதாரண்யத்தில் உள்ள யாழ்ப்பாணம் வரணி ஆதீனம், மற்றும் வேளாக்குரிச்சி ஆதீனம் போன்றவை. இவர்கள் மற்ற மக்களைப்போல் திருமணம் செய்துகொண்டு மனைவி மக்களோடு இருக்க இவர்கள் சட்டம் இடம் கொடுக்கிறது. இவர்கள் ஆதீனங்களுக்கும் ஏராளமான சொத்துண்டு; தனியொரு மனிதன் சுகமுற வேண்டி விரயமாக்கப்படும் வருமானங்களுமுண்டு.

கும்பகோணத்திலுள்ள காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு சங்கராச்சாரி மடம், அகோ

பில மடம், வானமாமலை ஜீயர் மடம் போன்றவை களும், திருப்பாப்புலியூர் ஞானியார் மடம், சிதம்பரம் ஈசான மடம், புதுச்சேரி அம்பலத்தாடு மடம், சிதம்பரம் மௌனசாமிமடம், மற்றும் திருவண்ணுமலை, கோவிலூர், பொருள்வைத்த சேரி முதலிய ஊர்களில் "அஹிம்சா பிரம்மாஸ்மி" (நானே பிரம்மம்) என்ற கொள்கையுள்ள மடங்களுமாக தமிழ் நாட்டில் ஏறக் குறைய முன்னூறு மடங்களுக்குமேலிருக்கின்றன.

இந்தத் தலைமை மடங்களுக்கு ஏராளமான கிளை மடங்களும் காசி முதல் கன்யாகுமரி வரையில் ஆங் காங்கு நிறைந்திருக்கின்றன. இவையன்றி ஏழை மடங்களாக சொற்பமான சொத்துடையவை ஊருக்கு ஒன்று இரண்டுவீதம் உபயோகமற்ற நிலையில் ஒருவர் இருவர் சுரண்டலுக்கும், சுகத்திற்கும் நிலைத்திருக் கின்றன.

அன்றியும் 'அரவிந்தாஸ்ரமம்,' 'ரமணாஸ்ரமம்' போன்ற பல ஆஸ்ரமங்களும் கோடிக்கணக்கான திர வியங்களைக் குவித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் தங்க சிம்மாசனத்திலே ஜரிகையுடை யுடுத்தி, நவரத்ன நகைகள் அணிந்து, வைரமுடி தரித்து, வைர வாள் கையிலேந்தி உபதேசிக்கும் அன்னவாசல் மெய்வழிச் சாலைத் தலைவர்கள் போன்றவர்களிடமும் சொத்துக் கள் முடக்கப்பட்டிருக்கின்றன.

இவைகள் போதாவென்று வட நாட்டிலிருந்து இறக்கப்படும் "நானிருக்கப் பயமேன்" என்று கூறும் சாயிபாபாக்கள், சத்ய சாயிபாபாக்கள், குஸும் ஹரிநாத்கள்மூலம் கொள்ளைபோகும் பணம் கொஞ்ச நஞ்சமல்ல. அன்றியும் பாதசாரியாக வடநாட்டி லிருந்து புறப்பட்டு குதிரை, ஒட்டகம் முதலான இரு நூற்றுக்கு மேற்பட்ட பரிவாரங்களோடு தமிழ கத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து பஜனை நடத்தி,

காணிக்கைகளும், சமாராதனைகளும் பெறும் கஜாபாய், மீராபாய், கங்காபாய்கள் மூலம் பகற்கொள்ளை போன்று லட்சக்கணக்கான பொருள் பறிபோவதோடு, இத்தகைய அவதார புருஷர்களால், அறிவையும் பறி கொடுத்து, மக்கள் மாக்களாக மாறி மனிதத் தன்மை இழந்து மாறுகிறார்கள் என்பதை மாற்றாதிருப்பது மானமுள்ள தமிழனின் மடத்தனமல்லாது வேறென்ன? புதையல் காக்கும் பூதங்கள்போன்ற இத்தகையவர்கள் எண்ணிக் கணக்கிட முடியாத வகையில் ஏராளமான சொத்துக்களுக்கு ஏகசக்ராதிபதிகளாய் இஷ்டம்போல் சுகமனுபவிக்க ஏழ்மைமிகுந்த இந் நாட்டில் விட்டுக் கொண்டிருப்பது ஏமாந்த இளிச்சவாய்த்தனம்தானே?

இன்றிருக்கும் நிலையில் பதுக்கப்படாமல் அத்தனை சொத்துக்களும் கிடைத்து, தொழிற்சாலைகள் நடத்தினால், ஏழை என்பதோ, ஏழ்மை என்பதோ இல்லாமல் செய்யக்கூடிய அளவு சொத்துக்கள் அடங்கியிருக்கின்றன மடம் – கோவில் – மற்றும் பித்தலாட்ட வேஷங்களின் பெயரால்.

சொத்து எப்படி கிடைத்தது?

இவர்கள் சித்தாந்தப்படி மானிட வகுப்பு பிரம்மச்சாரி – கிரகஸ்தன் – வானப்பிரஸ்தன் – சந்நியாசி என்று நாலுவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தேவ ஆராதனை – கடவுள் கைங்கர்யம் – கோவில் கைங்கர்யங்களில் தவறோ வழுவோ ஏற்பட்டால் கிடைக்கவேண்டிய புண்ணியமும்போய் தண்டனையான பாபம் ஏற்படுவதோடு; மறுமையில் பரலோக மோட்ச வாழ்வடையாது, நரகலோக வாழ்க்கைக்கு பிரம்மச்சாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன் ஆகிய மூன்று வகுப்பாரும் ஆளாக வேண்டுமென்று இவர்கள் சித்தாந்தம் கூறுகிறது.

சந்யாச ஆஸ்ரமத்துள்ளவர்களான துறவிகள் உலகப்பற்றற்றவர்கள். ஈசுவர கைங்கர்யத்தில் சிரத்தையுடையவர்கள் இல்லரஸ்தனைவிட நல்ல முறையில் கவனிக்க இவர்கட்கு ஓய்வும் வசதியும் உண்டு. இதில் தவறு ஏற்பட்டால்கூட பெரும்பாலும் இவர்கட்குப் பாதகமேற்படாததோடு பாதிக்கப்படகூடிய பரம்பரையும் இவர்கட்கு கிடையாது. இதே காரணத்தால்தான் ஏமார்ந்த சோணகிரிகளான மன்னர்களாலும், எத்தனையோ பிரபுக்களாலும் ஏராளமான சொத்துக்களும் எண்ணற்ற கோவில் நிருவாகங்களும் இவர்கட்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஆதீனங்களைத் தோற்றுவித்த தலைவர்களிலிருந்து இன்று தருமபுரத்திலிருப்பது இருபத்தைந்தாவது பட்டத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தப் பண்டாரச் சந்நிதி. திருவாடுதுறையிலிருப்பது பத்தொன்பதாவது பட்டத்து ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டாரச் சந்நிதி. திருப்பனந்தாளிலிருப்பது இருபதாவது பட்டத்து ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் ஆகும்.

ஆதியில் தமிழை வளர்க்கவும், சைவத்தை பரப்பவுமே சொத்துக்கள் தானம் செய்யப்பட்டன என்று கூறினேன். அதன்படி சுமார் நூராண்டுகளுக்கு முற்பட்ட மடாதிபதிகள், தங்கள் நியம நிஷ்டையான நித்ய கர்மானுஷ்டானங்களை நியதியோடு வழுவின்றிச் செய்து வாழ்நாளைக் கடத்தி இருக்கின்றனர். ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு முன்னிருந்த தலைவர்களுங்கூட, எவ்வித குறைபாடுமின்றி, ஓரளவு கண்யமாகவும், கவுரவமாகவும் காலங்கடத்தி முறைப்படி நடந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் தங்கட்கு ஓய்ந்த நேரங்களிலெல்லாம் மதப்பிரசாரம் செய்து வந்திருக்கின்றனர். நூற்றுக் கணக்கானவருக்கு உபதேசம் செய்து சைவத்தின் பெருமையை விளக்கிக்கூறி,

உழைப்பாளிகள் தோளிலே, ஒய்யார பவனி
இதற்குப் பெயர் பட்டினப்பிரவேசம்



வெள்ளியாலாக்கப்பட்ட நாற்காலிப் பல்லக்கு இதுதான்

அதன் பொருட்டே தங்கள் வாழ்நாளைக் கடத்திப் பேரின்ப வேட்கையோடு இருந்து வந்திருக்கின்றனர்.

மேலும் தமிழ் வளர்ச்சிக்காகப் பெரிதும் உழைத்த தோடு, பொருட்செலவும் செய்திருக்கின்றனர். பல வித்வான்களைக் கொண்டு நூல்கள் இயற்றச் செய்து, அதற்குரிய சன்மானமளித்து ஆதரித்திருக்கின்றனர். பலருக்குத் தமிழ்ப் பாடங்கள் கிரமப்படி சொல்லி வைத்து பண்டிதர்களாக்கி யிருக்கின்றனர். இந்நூல்கள் கடவுள் மத சம்மந்த மற்றிருக்க முடியாது. தேவையா, இல்லையா என்ற பிரச்னை வேறு விஷயம்.

அன்றியும் கபடு, சூது, வஞ்சனை, பொய், ஏமாற்றம், பித்தலாட்டம், கள்ள மார்க்கெட் போன்றவை முன்னைய தலைவர்களிடம் இருந்திருக்க முடியாது. தாசி, வேசி முதலியோருக்கு அள்ளி வீசப்படும் தண்டச் செலவுகளும் கிடையாது. கோர்ட்டுச் செலவுகளில் பணம் கொள்ளைபோனதில்லை. ஆடம்பர வகையில் அனுவசியமாய் ஆஸ்தி அழிக்கப்பட்டது கிடையாது. மனிதனுக்கு இன்றியமையாத உணவளிக்கும் வகையில் சிக்கனமோ, தராதரமோ இருந்ததில்லை. அன்றுள்ளோர் நீதி, நியாயம், தர்மம், கடமை, சத்தியம், மனசாட்சி, புண்ணியம், பாபம், மனிதத் தன்மை முதலியவற்றிற்கு கட்டுப்பட்டு சகல நிர்வாகங்களையும் தங்கள் கரும நியமங்களையும் நடத்தி இருக்கின்றனர். எனவே, வைதீக காரியங்களின்றி லௌகீகம் என்றால் என்னவென்று கூடத் தெரியாமல் நடந்து வந்திருக்கின்றனர். பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலே வழக்குகள்........ ....முதலிய லௌகீக காரியங்கள் மடத்தில் இடம் பெற்றுவிட்டன.

இன்றைய நிலை என்ன?

“வரவர மாமி கழுதை போலானள்” என்பது போல, காலம் மாறமாற இவர்கள் கொள்கையும் கோலமும கீழ்நோக்கி மாறிக்கொண்டே வருகின் றன. சத்காரியங்களுக்குப் பயன்பட வேண்டிய சொத்துக்கள் ‘எள்ளுக்கெண்ணெய் போல் அளந்து காட்டிப் பழிபடு போகம் விற்பார்’’ என பரஞ்சோதி முனிவர் கூறியுள்ள “வம்புக்காம் வேசிக்காம் பரத் தையர்க்காம்’’ என்றபடி பலவகையில் அழிக்கப் படுகிறது.

அழுக்கு படியாத உத்யோகஸ்தர்களுக்கு அமோக வரவேற்பும், அதிகமான சலுகைகளும் பெரும் பகுதி ஆதீனங்களிலே ஆதிக்கத்திலிருக்கி றது. பண்டாரச் சந்நிதிகளின் பரந்த நோக்கவிரிந்த மனப்பான்மைத் திருவருட் பிரசாதமனைத்தும் பரத் தையர்பால் பாரபட்சமின்றி பகிர்ந்தளிக்கப்படுகிறது. “தங்கமான திருமேனி வைரமான மதுமேனியை நாடு வது சகஜம் தானே.’’ என்கிருர் ஒருவர். தங்கமும் வைரமும் தனித்தனியாக இருக்கும் மதிப்பை விட இரண்டும் இணைக்கப்பட்டால் தானே ஈடில்லா மதிப் பேற்படும்!

உயிருள்ள ஒவ்வொன்றும் ஊடல் கூடலை விரும்பு வது இயற்கையல்லவா? இதை மாற்ற எவரால் முடி யும்? விதவைத் தன்மையை சட்டத்தில் புகுத்தி இம் மடாதிபதிகளை விதந்து[illegible]க்கி விட்டார்கள். வாழ்க்கை இன்பம் விடுபட்ட [illegible] விதவை வழுக்கி விழத் தானே செய்வாள்? இவர்கள்மட்டுமென்ன இதற்கு விதிவிலக்கா?

114155

தங்கள் தகிடுதத்தங்களை மறைக்க சாமிகள் படாடோபமாகப் பலவித விளம்பர தானங்களைச் செய்து வருகின்றனர். தில்லைத் தாண்டவருக்குச் சொக்கத் தங்கத்தால் அபிஷேக கலசம் இல்லாததால், இன்று நாட்டில் பஞ்சம் தாண்டவமாடவில்லை. பஞ்சத்தை நீக்கி மக்களைக் காக்கும் கடவுள்கள் கல்லிலும் செம்பிலுமில்லை. அப்படியே இருப்பினும் அந்தக் கடவுள்கள், மக்கள் வறுமையில் கலங்கித் தவிக்கும்போது, தங்கமும், பொன்னும் தாவென விரும்பிக் கேட்டு காணிக்கை பெறுவனவாக இருக்க முடியுமா? கடவுள்களுக்கு தங்கள் தேவைகளைத் தாங்களே தேடிக் கொள்ள வலிமையில்லையா?

நாட்டின் நிலைமைக்கு அத்யாவசியமான எத்தனை பொதுநல ஸ்தாபனங்கள் பொருளின்றித் தவிக்கின்றன? "ஆம்புலன்ஸ்" என்றும், சிகித்சைப்படை என்றும், தீ யணைக்கும் படை, மருத்துவ நிலையங்கள், அனாதைக் குழந்தைகள் ஆதரிப்பு சங்கம், விதவைகள் பராமரிப்பு நிலையம், அனாதை பிரேத அடக்க சங்கம் – ஊர் பாதுகாப்புத் திட்டங்கள் போன்ற எண்ணற்ற நிலையங்களுக்கு ஏன் இவர்கள் சொத்துக்கள் பயன்படக் கூடாது? இம்மாதிரி எந்த மடாதிபதியாவது பெரும்பாலும் உதவியிருக்கின்றனரா? இந்நிலையங்கள் உயிருக்கு ஊசலாடிக் கொண்டு, முந்திப் பிச்சை ஏற்பது போல சமயங்களில் நன்கொடைக்கு தட்டைத் தூக்கிக் கொண்டு நாலா பக்கமும் அலைகின்றனவே.

ஆதீனங்களுக்கு ஜஸ்டிஸ் ராமேசம், சி. பி. ராமசாமி அய்யர், மாஜி மந்திரி முத்தையா முதலியார், மாஜி மந்திரி பி. டி. ராஜன், பிரெஞ்சு கவர்னர்கள், ஆர். கே. ஷண்முகம் செட்டி, மந்திரி டி. எஸ். எஸ். ராஜன், ஆர்தர்ஹோப், மற்றும் கவர்னர்கள், கலெக்டர்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், அறநிலைய பாதுகாப்புத் தலைவர்கள் முதலியோர் விஜயம் செய்திருக்கிறார்களே!

குப்பைத் தொட்டியிலே!...



பாரடப்பா! பாரடப்பா!!... பண்டாரக் கட்டு...

இவர்கள் குதூகலமாக வரவேற்கப்பட்டு, இன் சுவை விருந்துகளையும், ஆடம்பர உபசரிப்புகளையும், ஏற்று வந்திருக்கிறார்களே! இவர்கள் கூறட்டும் இன்று மடங்கள் தேவையா வென்று? இவர்கள் கூறட்டும் மடாதிபதிகளின் போக்கு இப்படியே போய்க்கொண்டு தானிருக்க வேண்டுமா என்று! இவர்கள் கூறட்டும் இந்தச் சொத்துக்கள் நற்காரியங்களுக்கு பயன்படுமா படாதா வென்று! மனச்சாட்சிக்கு மாறுபடாத நிலையில், மக்கள் துயர் தெரிந்த எவரும், பாழ்படும் இத்த கைய பணம் பயன்படும் பலனுள்ள காரியங்களுக்கு என்று கூற பின்வாங்க மாட்டார்கள்.

மாறுவேடத்துடன் நள்ளிரவில் யாசித்த மன்னனுக்கு உணவளித்ததற்காகத் தானே, மன்னன் சொத்து தானம் செய்தான்! ஆண்டவனுக்கு ஆராதனை செய்ய நெல் விளையும் பூமியை உழுவதற்கு ஏரில் கட்ட ஒரு மாடில்லாமல் தானே மாடாக நின்று உழுவதைக் கண்டு அரசன் சொத்து அளித்தானே! "...... ஏட்டைப் பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும், பரிந்தவ் வேட்டைத் தொட்டாலும் கை மணக்கும், சொன்னாலும் வாய்மணக்கும், தூய சேற்றில் நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினுடை நளினந் தானே!" என்று புகழப்பட்ட "படிக்காசு"த் தம்பிரானால் புதுக்கோட்டை மன்னன் முதலியவர்களிடமிருந்து சொத்துக்கள் தானம் வாங்கியளிக்கப்பட்டதே!

"ஆய்லார் பதிபசு பாத்துண்மை ஆய்ந்தறிந்து, காய்லார் பிரபஞ்ச வாழ்க்கையெல்லாம் கல்வி கேள்வியல்லல், ஓய்லார் சிவானந்த வாரியுள்ளே ஒன்றிரண்டு மறத்தோய்வார் கமலையுள் ஞானப் பிரகாசன் மெய்த்தொண்டர்

களே" என்பதைக் கேள்வியுற்றுத் தானே, மைசூர் மன்னன் சிறிது சொத்துக்கள் தானம் கொடுத்து வருடா வருடம் கறவை மாடுகளும் அனுப்பி வந்தது.

மற்றும் இதே போன்ற எண்ணற்ற அதிசயங்களையும், அற்புதங்களையும், சத் காரியங்களையும் கண்டு தானே மடங்களுக்கு காசி நவாப், டில்லி பாதுஷா, அவர் மகள் ஷா வுன்னிஸா, தஞ்சை மன்னன் ஏகோஜி, ராணி சுகுணாபாய் மற்றும் பல சிற்றரசர்களும், பிரபுக்களும் சொத்துக்கள் தானம் கொடுத்தனர். அன்னதானமும் சமயப் பாதுகாப்பும் மொழி முன்னேற்றமும் முறைப்படி அன்று நடந்ததே! இன்றென்ன?

அழகில்லா அணங்கு, புகழில்லா ஆடவன், கற்பனைத் திறமில்லாத கவி, பாதகத்துக் கஞ்சும் ராஜதந்திரி, பொய் யுரைக்கத் தெரியாத சிப்பந்திகள், போகத்தில் புரளாத பிரதானியர் ஆகியோர்க்கு லிவியா காலத்தில் ரோம் ராஜ்ய சபா மண்டபத்தில் இடமே கிடையாது."

என "ரோமாபுரி ராணிக"ளில் கூறப்படுவது போன்று, இம்மடாதிபதிகளிடமும் இத்தகையோர்க்கு இன்று இடமில்லை என்ற முறையில் நிர்வாகம் நடந்து வருகிறது.

ஆக்கவேலைக்குப் பயன்பட வேண்டிய சொத்துக்கள் அழகிகள் பணியிலா நாசமாக்கப்பட வேண்டும்? இது கண்டு தான் பொதுமக்கள் மனம் குமுறுகின்றனர்! பொசுக்குங்கள் மடங்களை என்கின்றனர்; புத்தமைப்புக் காண வேண்டுமென அமைச்சர்களும் போர் முரசு அறைகின்றனர். ஒருவனைப் பல நாள் ஏமாற்றலாம்; பலரைச் சிலநாள் ஏமாற்றலாம்; எல்லோரையும் எந்தக் காலமும் ஏமாற்ற இயலாது! இவ்வளவு தூரம் விரிவாகக் கூறும்.

நான் யார்?

நான் யார்? என்பதை அறிய உங்களுக்கு ஆவல் இருக்கும். என நான் எண்ணுவதால் என்னைப்பற்றி சில குறிப்புகள் கீழே கூற ஆசைப்படுகிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே ஆடுதுறை ரயில் நிலையத்திலிருந்து வடக்கே ஒன்றரை மைலிலுள்ள "ஸ்ரீமத் ஆதிவர்ணாச்சிர ஆச்சார்யவர் சைவ சமய பரிபாலக ஸ்ரீ சிவாக்ரயோகீந்த்ர ஞான சிவாச்சார்ய ஸ்வாமி" களைக் குருபீடமாகக் கொண்ட சூரியனார் கோவில் ஆதீனத்தின் மாஜி சின்னப் பண்டாரச் சந்நிதி நான் என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

1928-ம் வருடம் மே மாதம் அதாவது விபவ வருடம் வைகாசித் திங்கள் பதினோராம் நாள், நான் பிரம்மச்சரிய ஆஸ்ரமத்திலிருந்து நான்காவது படியான சந்யாசி ஆஸ்ரமத்திற்கு மாற்றப்பட்டு காவியுடை கட்டித் துறவறம் பூண்டு சில சின்னங்களணிந்தேன். மடாதிபதிகளால் மட(ச்)சட்டப்படி அன்று எனக்கு யாத்திரை - மந்திர காஷாயங்கள் கொடுக்கப்பட்டு, சமய - விசேட - நிருவாண - ஞான தீட்சைகள் நடத்தப்பட்டு, பார்கிப - உடையவர் ஞான பூஜைகளும் வைக்கப்பட்டு, ஆண்டவன் கோமுனகயில் உட்காரவைத்து அபிஷேகாதிகளும் நடத்தப்பட்டு, அன்றே சின்னப் பண்டாரச் சந்நிதிகளாக்கப்பட்டு, சப் ரிஜிஸ்டாரை வரவழைத்து உயிலும் எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு விட்டது. அன்றிடப்பட்ட எனது பெயர் "பரமாநந்த சிவயோகித் தம்பிரான் என்பதாகும்.

மேற்கூறிய சடங்குகள் அனைத்தும் காவியுடைக் கட்டிப் பல்லாண்டு கழித்தே, அனுபவமிக்க தம்பிரான்

திறந்த வெளியிலே !...



பராரிக் கூட்டம்

களில் எவரேனும் ஒருவர் அடைய முடியும். குறைந் தது இருபதுவருட அனுபவத்திற்கு மேல் தான் ஞான தீட்சை—ஞானபூசை செய்து வைப்பார்கள். சலுகை யின் காரணமாக ஒரே நாளில் அதிவிரைவில் எனக்கு அனைத்தும் நடத்தப்பட்டு விட்டது.

பரம வைதீக குடும்ப பரம்பரையான எனக்கு, பள்ளி வாழ்க்கையிலே, "கடவுளை நேரில் பார்த்துப் பேச தபசாலும், யோகத்தாலும் முடியும்" என்ற நம் பிக்கையே என்னை மடாதிபதிகளிடம் சிக்கவைத்தது. எனவே, சின்ன மடாதிபதியானவுடன் அவர்கள் எனக்கு போதித்த ஆக்ம – வேத – புராண – இதிகாச உண்மைகளை உள்ளன்போடு நன்கு சிந்தித்து அவ்வழி சிறிதும் வழுவாது ஜெபதப பூஜை வழிபாட்டு நித்திய கருமங்களை நியதியோடு செய்து வந்தேன்; முற்றும் நம்பினேன்; மோட்சம் நிச்சயம் என்ற முடிவும் கொண் டிருந்தேன்.

இவ்வளவும் நடந்த அன்று சட்டப்படி "மைனர்" ஆகிய எனக்கு வயது பதினன்கு தான்.

இந்த ஆதீனம் மற்றவற்றை போல் சொத்தில் அவ்வளவு பெரிதல்ல. ஆனல், கௌரவத்தில், மதிப் பில், பரம்பரையில் மற்றவற்றிற்கு சமமானது; உயர்ந் தது என்று கூடக்கூறலாம். இதற்கு வருடவருமானம் மிகமிகக் குறைவு.

நான் சின்னப் பண்டாரச் சந்நிதியானவுடன் ஆறு மாதங்களில் தருமபுரம் போக நேர்ந்தது. அன்று என் னைக்கண்டதும், என்மேல் தனி அன்பு ஏற்பட்டது அன்றிருந்த மகா சந்நிதானத்திற்கு. அத்துடன் ஆதீன முறைப்படி ஆகம பரிசோதனை அவரால் செய்யப்பட்ட தில், ஆணித்தரமாய்ப் பதில் கூறினேன். என்னுடைய பக்தி கிரியைகள் அவருக்குப் பெரும் வியப்பைத் தந்தன. பட்டத்திற்குரிய பக்குவ பாத்திரம் என பரமானந்தங் கொண்டார்.

எனவே, என்பால் அவர் கொண்டிருந்த அன்பு, என்னை அங்கேயே தங்கச்செய்து விட்டது. இப்படி இருக்க மட(ச்)சட்டம் இடம் தருகிறது. ஆகவே, எனக்குத் தனியிடம், ஆள் மாகாணம், படிப்புத்திட்டம். உணவுவசதி, பொருட்செலவுமுதலியசகல போகங்களும் திட்டப்படுத்தப் பட்டுவிட்டன. கூண்டிற்கிளி போலசொன்னதைச் சொல்லிக்கொண்டிருந்த எனக்கு அரசபோகத்துக்கு மேலான இந்த ஆனந்த ஆதிக்க வாழ்வு என்னை அங்கேயே தங்கச் செய்து விட்டது.

நாளாக ஆக யோக போதனையில் தேறிய எனக்கு மடாதிபதிகளின் சாதனையும், மற்ற தம்பிரான்களின் பழக்கவழக்கங்களும் என் ஒழுக்கங்களுக்கு மாற்ற மளித்து விட்டன. சுருங்கக்கூற வேண்டுமானல் "சந்தியா வந்தனம்" என்ருல் சாம்பல் சூடுபோடுவது, "சிவ பூஜை" என்ருல் சந்தனப் பொட்டிடுவது என்ற முடிவுக்கு வந்து விட்டேன். எனவே, மோட்ச சாம்ராஜ்யத்தை எட்டிப் பிடித்துக்கொண்டிருந்த நான், "வாணுளை வீணுளாய்க் கழிப்பது? எந்தெந்த வகையில் சுகிப்பது? அதிகாரம் எப்படி செலுத்துவது? என்பவைகளைத் தான் சித்தமாகக்கொண்டுவிட்டேன். முடிவாகக்கூறுமிடத்து எனது நித்தியகர்மானுஷ்டான பக்திகளெல்லாம் ஆடிக்காற்றிலகப்பட்ட அப்பளத்துண்டுகள் போலாகி விட்டன.

"ஸ்ரீமத் அகண்ட பரிபூரண சச்சிதானந்த சிவ சொரூபத்தின் திருவருட் சத்திதானே திரு அவதாரங் கொண்டெழுந்தருளியிருக்கும் திருச்சந்நிதானத்தின் திருவடித் தாமரைகட்கு அடியேன் சுப்பிரமணியன் நமஸ்காரம்" என மகுடமிட்டுத்தான் கடிதமனுப்புவார், எனக்கு என் தகப்பனுர். இவர் என்னைக் கண்டு தரிசித்து அருள்பெற வந்த காலத்தில், ஐந்து நாள் கழித்துத்தான் அவருக்கு பேட்டி அளித்தேன்; அதிகார மமதையால் உணவு வசதி வரவேற்பு முறை

களில் கூட அவரை நன்முறையில் நடத்தாமல் அனுப்பிவிட்டேன், ஆணவச் செருக்கினுல்.

மற்றும் அன்னை தந்தை இருவரும் எதிரே நிற்க பெரிய பண்டாரச் சந்நிதிகள் கேட்ட கேள்விகளுக்கு "இவர்கள் என்பெற்ருேர்களல்ல. அநாதி முக்தனை அந்த ஆண்டவனே என் அன்னை தந்தை" எனச் சிறிதும் அச்சமற்று மனசாட்சிக்கு மாறுபட்ட தன்மையிலே கூறினேன். அத்துடன் அவர்கள் மனம் புண்பட பலப்பல பேசி அனுப்பிவிட்டேன்.

அடுத்தபடியாக உடன்பிறந்த அண்ணனை அவமானப்படுத்திக் கொடுமைப் படுத்தியதாகும். இரவு மூன்று மணிமுதல் மறுதினம் காலை ஒன்பது மணி வரை மடத்து வாசலிலுள்ள கல் தூணில் நின்ற நிலையிலே சேர்த்துக் கட்டிவைக்க உத்தரவு இட்டேன். மனிதத்தன்மைக்கும் மாறுபட்ட மிருகத் தனத்திற்கும் கீழாக ஒப்பிடவேண்டிய இந்த இழி செயல், அன்பின் மிகுதியால், இரத்தத்துடிப்பால் என்னைக்காண வந்த அண்ணனுக்கு அளித்த பரிசு!

கடைசியாகச் சொன்னுல் பணத்திமிர், அதிகார மமதை, ஆள் மாகாண வசதி, இவைகளால் சர்வாதிகாரம் செலுத்தும் சண்டாளத்தனங்கள் அண்டி விட்டன என்னை. நான் தருமபுரத்திலிருந்த காலை வயிநாகரம் பாலகவி ராமனுதன் செட்டியார் என்னைப் பற்றி

"சூரியனுர் கோவிலெறு மாதீனத்
தலைவர் முதற்ருெடர்ந்து சைவ
வீரராய்ப் புறமதங்கள் வீழ்ந்தழிய
வாதவாள் வீசிவென்று
தீரராய் இருந்தனர்கள் இருக்கின்றுர்
பின்தாங்கச் செனித்த புத்திக்
காரராகிய பரமாநந்த சிவயோகி
மழகளிறு வாழ்கமன்றே!"

என்று பாடினுர்.

இத்தகைய எனது வாழ்க்கையின் அடுத்த கட்டம் சுமார் ஒன்றரை ஆண்டில் நான் தருமபுரத்தில் இருந்து திருப்பனந்தாள் ஆதீனத்திற்கு வந்து தங்கியது. அன்றைய மடாதிபதி எனக்களித்த சலுகைகள், என்னுடைய துர்ப் பழக்கங்களுக்கு பெரிதும் இடமளித்து விட்டன. சுருங்கக் கூறின் "தாகசாந்தி" "மோகப் பூர்த்தி" இரண்டிற்கும் அடிகோலி அவைகளில் வெற்றிபெற்று விட்டேன் அந்தப் பருவத்திலே.



இந்தச் சமயம் தான் நற்கால வசத்தால் மனச்சாட்சி, நன்மை தீமை, மனிதன் கடமை, இது பற்றி என்னையுமறியாமல் சிந்திக்க ஏற்பட்டது. எனவே, மடாதிபதி வாழ்க்கையில் கடந்த காலத்தில் நான் செய்த அக்ரமங்கள், சொல்லும் செயலும் மாறுபட்ட தன்மை, துறவறம் பூண்ட அன்றிருந்த நிலைமாறி, பின்னர் என்னைத் தொடர்ந்த

ஆதிக்கச் செயல்கள் ஆகிய அனைத்தும் என் சிந்தைக்கு வேலை கொடுத்தன. ஆகவே, சொல்லளவிலுள்ள துறவறத்தை நீக்கி வெளியேற முடிவு கட்டினேன்.

பிறகு எனது 18ம் வயதில் காவியுடைப் போலிவேடத்தைக் களைந்தேன். அவர்கள் சின்னங்களையும் அழித்தொழித்தேன். மக்கட் பண்பிற்குரிய வெண்ணுடை தரித்து வெளிப்போந்தேன், மனத் தூய்மையுடன்.

உங்கள் தீர்ப்பு என்ன?

இத்தகைய வாழ்க்கையால் தான் நான் இவ்வளவு விளக்கமாக எடுத்துக்கூற முடிந்தது. இந்த அளவு கூட மடாதிபதிகளைப் பற்றி பொது மக்கள் அறிய இடமில்லை என்ற ஒரே குறிக்கோளோடு தான் இதை வெளியிட்டேன். இன்னும் பல மடங்களையும், ஒவ்வொன்றையும் விவரித்துக் கூறிக் கொண்டே போனால் இதைப்போல் பல நூல்களாகிவிடும். நான் அறியாதன எவ்வளவோ உண்டு. அறிந்ததிலும் சிறுபகுதிதான் தீட்ட முடிந்தது. இருக்கும் நிலவரங்களை தொகுத்துக் கூறியிருக்கிறேன். படித்துச் சிந்தித்து தெளிந்து பலனுள்ளது எது என நீங்களே முடிவுகட்டுங்கள். பகுத்தறிவுக்கு வேலை கொடுத்தாலன்றி, நாட்டுக்கு விமோசனம் நம் கண் முன்னிலில்லை.

இதற்கு மறுப்பு கூறுமுகத்தான் எதிர்ப்பு நூலும் வெளிவரலாம். அவற்றையும் வாங்கிப் படியுங்கள். "பிரசாரவான்கள்" மூலம் உபன்யாசகர்கள் உபதேசம் செய்கிறார்கள் அவர்கள் பேச்சையும் கேளுங்கள். இந்நூலையும் படித்து எண்ணிப்பாருங்கள். எது உசிதமென நீங்களே தீர்ப்பளியுங்கள்.

ஆகவே, தமிழ் நாட்டில் தமிழர்களால் தானமளிக்கப்பட்ட சொத்தைக் கொண்டு தனியொரு மனிதன் சுகிக்கிறான், தறுதலைத்தனமாக நடக்கிறான், என்ற உண்மைகளை பொதுமக்களில் பெரும்பாலார் தெரிந்து கொள்ள முடியும் இந் நூலிலே.

மடங்கள் இப்படியே இருக்க வேண்டியதுதானா? மட(ச்) சட்டத்தில் மாற்றம் உண்டாக்க வேண்டுமா? மடாதிபதிகளின் போக்கு இப்படியே போய்க் கொண்டிருக்க வேண்டியது தானா? அவர்களை நல்ல வழிக்குத் திருப்பி நற்றொண்டு செய்யச் சட்டம் வகுக்க வேண்டியது தானா? என்பனபற்றி சிந்தியுங்கள். சிறுகச் சிறுகச் சிந்தியுங்கள். மூவாசைகளை வெறுத்து, மும்மலங்களை நீக்கி, முப்பெரு உண்மைகளை உணர்ந்து, மூவாஸ்ரமங்களைத் தாண்டி சந்யாச ஆஸ்ரமத்தில் இருப்பதாக வேடத்தால் மட்டும் விளம்பரம் செய்து கொண்டு, ஒரு பயனுமில்லாதுதான் உல்லாசமாய் வாழும் மடாதிபதிகள் தேவையா என்பதே இன்றையப் பிரச்னை ஆகும்.

“கடவுள் நமது மட(த்) தலைவர்களை நேரான மார்க்கத்தில் நடத்துவிப்பானாக.” May God guide the heads of our mutts in the right direction. என ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் கூறியது போல ஆதீனத் தலைவர்கள் மக்கள் அகங்களிக்கும் முறையில் தங்கள் ஆட்சியை நடத்திக்கொண்டு போக ஆண்டவன் அருள்புரியட்டும்.

114155

சகல விதமான

மர சாமான்களுக்கும்

சிறந்த இடம்

கிராஸ்லீட் பர்னிஷிங் டெப்போ

கும்பகோணம்

உறுதியானது, உத்திரவாதமுள்ளது

வேலைப்பாடமைந்தது

ரேடியோவில் சிறந்தது

பைலட் ரேடியோக்கள்

பைலட் ரேடியோக்களுக்கு

தஞ்சை ஜில்லாவிற்கு பூரண

வினியோகஸ்தர்கள் :

குமார் ரேடியோஸ்

13, நாணயக்காரத்தெரு : : கும்பகோணம்.